www.GRLVidya.in

SURYA®
POWER TO SCORE

# இளமைத்தமிழே

**2019 புதிய பாடத்திட்டத்தின்படி**

# 12

1000க்கும் மேற்பட்ட ஒரு மதிப்பெண் கூடுதல் வினாக்கள்

40 மொழிப்பயிற்சி தலைப்புகள்

இலவசம்

மொழிபயிற்சி கையேடு


உரையாசிரியர்கள்:

முனைவர் **சி. பரந்தாமன்,** M.A., M.Ed., M.Phil, Ph.D.,
முதுகலைத்தமிழாசிரியர், கடலூர்.

**ஜே. தர்மராஜ் ஜேசுதாஸ்,** M.A., M.Ed.,
உதவித் தலைமையாசிரியர், திண்டுக்கல்.

**ம.ராபர்ட்,** M.A., B.Ed., M.Phil. Ph.D.,
முதுகலைத்தமிழாசிரியர், பாளையங்கோட்டை.

குருசடி **எம்.ஏ. ஜெலஸ்டின்,** M.A., B.Ed. M.Phil.,
முதுகலைத்தமிழாசிரியர், நாகர்கோவில்.

**சி. ஜாண் @ மாடசாமி,** M.A., B.Ed., M.Phil.
முதுகலைத்தமிழாசிரியர், பாளையங்கோட்டை.

**கே.ஆர். மஞ்சுளா**
முதுகலைத்தமிழாசிரியை, மதுரை.



## SURYA PUBLICATIONS®

(A unit of **Shyamala** Group)

**Corporate Office:**
No. 1, Sugar Mill Colony,
Salai Kumaran illam, Madurai Road,
**Tirunelveli - 627 001.**
Phone : 0462 - 2338899, 2338484
Mobile : 94431-58484, 95978-39822
E-mail : suryaguides@yahoo.com

**Registered Office:**
New No. 59, 4th Avenue,
Opp. to Govt. Boys Hr. Sec. School,
**Ashok Nagar, Chennai - 600 083.**
Ph : 044 - 24744484
Mobile: 94421-58484, 94425-58484
E-mail: srigangapublications5@gmail.com

**website : www.suryapublications.in**

**Price ₹ 290/-**

*Published by*
***B.Arumugam***
Surya Publications
(A Unit of Shyamala group)

## OUR BANK DETAILS

### TIRUNELVELI ACCOUNT

| | | |
|---|---|---|
| Account Name | : | **Surya Publications** |
| Account Number | : | 446971431 |
| Bank Name | : | Indian Bank |
| IFSC Code | : | IDIB000T034 |
| Branch Name | : | Tirunelveli Junction |

| | | |
|---|---|---|
| Account Name | : | **Surya Publications** |
| Account Number | : | 510909010051752 |
| Bank Name | : | City Union Bank |
| IFSC Code | : | CIUB0000230 |
| Branch Name | : | Palayamkottai |

### CHENNAI ACCOUNT

| | | |
|---|---|---|
| Account Name | : | **Sri Ganga Publication** |
| Account Number | : | 928507483 |
| Bank Name | : | Indian Bank |
| IFSC Code | : | IDIB000A031 |
| Branch Name | : | Ashok Nagar |

| | | |
|---|---|---|
| Account Name | : | **Sri Ganga Publication** |
| Account Number | : | 512020010022514 |
| Bank Name | : | City Union Bank |
| IFSC Code | : | CIUB0000230 |
| Branch Name | : | Palayamkottai |

www.GRLVidya.in

# பொருளடக்கம்


| எண் | பொருண்மை | | பாடத்தலைப்புகள் | பக்கம் |
|---|---|---|---|---|
| ஒன்று | மொழி | **உயிரினும் ஓம்பப் படும்** | | |
| | | செய்யுள் | இளந்தமிழே! | 1 - 6 |
| | | உரைநடை | தமிழ்மொழியின் நடை அழகியல் | 7 - 16 |
| | | செய்யுள் | தண்டியலங்காரம்* | 17 - 22 |
| | | துணைப்பாடம் | பாரதியின் கடிதம் | 23 - 29 |
| | | இலக்கணம் | தமிழாய் எழுதுவோம் | 30 - 41 |
| | | | **மாதிரி வினாத்தாள் - 1** | 42 - 44 |
| இரண்டு | இயற்கை, வேளாண்மை, சுற்றுச்சூழல் | **பெய்யெனப் பெய்யும் மழை** | | |
| | | உரைநடை | பெருமழைக்காலம் | 45 - 53 |
| | | செய்யுள் | பிறகொரு நாள் கோடை | 54 - 58 |
| | | செய்யுள் | நெடுநல்வாடை* | 59 - 65 |
| | | துணைப்பாடம் | முதல்கல் | 66 - 71 |
| | | இலக்கணம் | நால்வகைப் பொருத்தங்கள் | 72 - 83 |
| | | | **மாதிரி வினாத்தாள் - 2** | 84 - 86 |
| மூன்று | பண்பாடு | **சுற்றத்தார் கண்ணே உள** | | |
| | | உரைநடை | தமிழர் குடும்ப முறை | 87 - 98 |
| | | செய்யுள் | விருந்தினர் இல்லம் | 99 - 102 |
| | | செய்யுள் | கம்பராமாயணம்* | 103 - 113 |
| | | துணைப்பாடம் | உரிமைத்தாகம் | 114 - 117 |
| | | இலக்கணம் | பொருள் மயக்கம் | 118 - 129 |
| | | வாழ்வியல் | திருக்குறள்* | 130 - 142 |
| | | | **மாதிரி வினாத்தாள் - 3** | 143 - 146 |
| நான்கு | கல்வி | **செல்வத்துள் எல்லாம் தலை** | | |
| | | உரைநடை | பண்டைய காலத்துப் பள்ளிக்கூடங்கள் | 147 - 161 |
| | | செய்யுள் | இதில் வெற்றி பெற* | 162 - 169 |
| | | செய்யுள் | இடையீடு | 170 - 174 |
| | | செய்யுள் | புறநானூறு* | 175 - 183 |
| | | துணைப்பாடம் | பாதுகாப்பாய் ஒரு பயணம் | 184 - 188 |
| | | இலக்கணம் | பா இயற்றப் பழகலாம் | 189 - 197 |
| | | | **மாதிரி வினாத்தாள் - 4** | 198 - 200 |

| எண் | பொருண்மை | | பாடத்தலைப்புகள் | பக்கம் |
|---|---|---|---|---|
| ஐந்து | நாகரிகம், தொழில், வணிகம் | **நாடென்ப நாட்டின் தலை** | | |
| | | உரைநடை | மதராசப்பட்டினம் | 201 - 210 |
| | | செய்யுள் | தெய்வமணிமாலை★ | 211 - 215 |
| | | செய்யுள் | தேவாரம் | 215 - 219 |
| | | செய்யுள் | அகநானூறு | 220 - 225 |
| | | துணைப்பாடம் | தலைக்குளம் | 226 - 229 |
| | | இலக்கணம் | படிமம் | 229 - 239 |
| | | | **மாதிரி வினாத்தாள் - 5** | 240 - 242 |
| ஆறு | கலை, அழகியல், புதுமைகள் | **சிறுகை அளாவிய கூழ்** | | |
| | | உரைநடை | திரைமொழி | 243 - 251 |
| | | செய்யுள் | கவிதைகள் | 252 - 254 |
| | | செய்யுள் | சிலப்பதிகாரம்★ | 255 - 263 |
| | | செய்யுள் | மெய்ப்பாட்டியல் | 264 - 269 |
| | | துணைப்பாடம் | நடிகர் திலகம் | 270 - 275 |
| | | இலக்கணம் | காப்பிய இலக்கணம் | 276 - 287 |
| | | வாழ்வியல் | திருக்குறள் | 288 - 296 |
| | | | **மாதிரி வினாத்தாள் - 6** | 297 - 300 |
| ஏழு | நாடு, சமூகம், அரசு, நிருவாகம் | **அருமை உடைய செயல்** | | |
| | | உரைநடை | இலக்கியத்தில் மேலாண்மை | 301 - 309 |
| | | செய்யுள் | அதிசயமலர் | 310 - 313 |
| | | செய்யுள் | தேயிலைத் தோட்டப் பாட்டு | 313 - 317 |
| | | செய்யுள் | புறநானூறு★ | 318 - 322 |
| | | துணைப்பாடம் | சங்ககாலக் கல்வெட்டும் என் நினைவுகளும் | 323 - 326 |
| | | இலக்கணம் | தொன்மம் | 326 - 338 |
| | | | **மாதிரி வினாத்தாள் - 7** | 339 - 341 |
| எட்டு | மனிதம், ஆளுமை | **எல்லா உயிரும் தொழும்** | | |
| | | உரைநடை | நமது அடையாளங்களை மீட்டவர் | 342 - 350 |
| | | செய்யுள் | முகம் | 351 - 353 |
| | | செய்யுள் | இரட்சணிய யாத்திரிகம்★ | 354 - 360 |
| | | செய்யுள் | சிறுபாணாற்றுப்படை★ | 361 - 367 |
| | | துணைப்பாடம் | கோடை மழை | 368 - 371 |
| | | இலக்கணம் | குறியீடு | 372 - 381 |
| | | | **மாதிரி வினாத்தாள் - 8** | 382 - 384 |

மனப்பாடப் பகுதி

## தன்னேர் இலாத தமிழ்

ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத்(து) இருளகற்றும் – ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன்(று) ஏனையது
தன்னேர் இலாத தமிழ்!

*– தண்டி*

## நெடுநல்வாடை

'வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்
பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென
ஆர்கலி முனைஇய கொடுங்கோல் கோவலர்
ஏறுடை இனநிரை வேறுபுலம் பரப்பிப்
புலம்பெயர் புலம்பொடு கலங்கி கோடல்
நீடுஇதழ்க் கண்ணி நீர் அலைக் கலாவ
மெய்க்கொள் பெரும்பனி நலிய பலருடன்
கைக்கொள் கொள்ளியர் கவுள்புடையூஉ நடுங்க

*–நக்கீரர்*

## கம்பராமாயணம்

'துன்பு உளதுஎனின் அன்றோ
  சுகம் உளது? அது அன்றிப்
பின்பு உளது; இடை மன்னும்
  பிரிவு உளது என உன்னேல்;
முன்பு உளெம் ஒரு நால்வேம்
  முடிவு உளது என உன்னா
அன்பு உள, இனி, நாம் ஓர்
  ஐவர்கள் உளர் ஆனோம்.
குகனோடும் ஐவர் ஆனேம்
  முன்பு; பின் குன்று சூழ்வான்
மக னொடும் அறுவர் ஆனேம்;
  என்முழை அன்பின் வந்த
அகன் அமர் காதல் ஐய!
  நின்னொடும் எழுவர் ஆனேம்;
புகல் அருங் கானம் தந்து,
  புதல்வரால் பொலிந்தான் நுந்தை.

*– கம்பர்*

## திருக்குறள்

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் லரிது.

நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்லது
அன்றே மறப்பது நன்று.

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

அஃகாமை செல்வத்திற்கு யாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள்.

மறத்தல் வெகுளியை யார்மாட்டும்; தீய
பிறத்தல் அதனான் வரும்.

தன்னைத்தான் காக்கின் சினம்காக்க; காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்.

சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்.

நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றும்தன்
உண்மை அறிவே மிகும்.

– *திருவள்ளுவர்*

## இதில் வெற்றிபெற

விண்வேறு; விண்வெளியில் இயங்கு கின்ற
வெண்மதியும் செங்கதிரும் முகிலும் வேறு;
மண்வேறு; மண்ணோடு கலந்தி ருக்கும்
மணல்வேறு; பனித்துளியும் மழையும் வேறு;
புண்வேறு; வீரர்களின் விழுப்புண் வேறு;
புகழ்வேறு; செல்வாக்கு வேறு; காணும்
கண்வேறு; கல்விக்கண் வேறு; கற்றார்
கவிநடையும் உரைநடையும் வேறு வேறு.

– *சுரதா*

## புறநானூறு

அறிவும் புகழும் உடையோர் மாய்ந்தென,
வறுந்தலை உலகமும் அன்றே; அதனால்
காவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை;
மரங்கொல் தச்சன் கைவல் சிறாஅர்
மழுவுடைக் காட்டகத்து அற்றே
எத்திசைச் செலினும், அத்திசைச் சோறே.

–*ஔவையார்*

## தெய்வமணிமாலை

ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவுவேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவுகல வாமைவேண்டும்
பெருமைபெறும் நினதுபுகழ் பேசவேண்டும் பொய்மை
பேசா திருக்கவேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமானபேய்
பிடியா திருக்கவேண்டும்.

–*இராமலிங்க அடிகள்*

## சிலப்பதிகாரம்

குழல்வழி நின்றது யாழே, யாழ்வழித்
தண்ணுமை நின்றது தகவே, தண்ணுமைப்
பின்வழி நின்றது முழவே, முழவொடு
கூடி நின்று இசைத்தது ஆமந்திரிகை — *இளங்கோவடிகள்*

## திருக்குறள்

அறிவற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்அழிக்கல் ஆகா அரண்.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.

எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை
அதிர வருவதோர் நோய்.

நல்லினத்தின் ஊங்கும் துணையில்லை; தீயினத்தின்
அல்லல் படுப்பதூஉம் இல்.

வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்
மற்றைய எல்லாம் பிற.

சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்.

உருவுகண்டு எள்ளாமைவேண்டும்உருள்பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து.

கடன்அறிந்து காலம் கருதி இடன்அறிந்து
எண்ணி உரைப்பான் தலை.

வாள்போல் பகைவரை அஞ்சற்க; அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு.

பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்
கழகத்துக் காலை புகின். — *திருவள்ளுவர்*

## புறநானூறு

காய்நெல் அறுத்துக் கவளம் கொளினே;
மாநிறைவு இல்லதும், பல்நாட்கு ஆகும்;
நூறுசெறு ஆயினும், தமித்துப்புக்கு உணினே,
வாய்புகுவதனினும் கால்பெரிது கெடுக்கும்; — *பிசிராந்தையார்*

## இரட்சணிய யாத்திரிகம்

பாதகர் குழுமிச் சொற்ற பழிப்புரை என்னும் கொள்ளி
ஏதமில் கருணைப் பெம்மான் இருதயத்து ஊன்ற ஊன்ற
வேதனை உழந்து சிந்தை வெந்து புண்பட்டார் அல்லால்
நோதகச் சினந்தோர் மாற்ற நுவன்றிலர் கரும நோக்கி. — *எச்.ஏ. கிருட்டிணனார்*

## சிறுபாணாற்றுப்படை

எழுசமங் கடந்த எழு உறழ் திணிதோள்
எழுவர் பூண்ட ஈகைச் செந்நுகம்
விரிகடல் வேலி வியலகம் விளங்க
ஒருதான் தாங்கிய உரனுடை நோன்தாள். — *நத்தத்தனார்*

# இயல் 1 உயிரினும் ஓம்பப் படும்

மொழி

| | | |
|---|---|---|
| செய்யுள் | இளந்தமிழே! | சிற்பி பாலசுப்பிரமணியம் |
| உரைநடை | தமிழ்மொழியின் நடை அழகியல் | தி.சு. நடராசன் |
| செய்யுள் | தன்னேர் இலாத தமிழ் (தண்டியலங்காரம்) | தண்டி |
| துணைப்பாடம் | தம்பி நெல்லையப்பருக்கு (பாரதியார்) | பாரதியார் |
| இலக்கணம் | தமிழாய் எழுதுவோம் | |

## இயல் 1 செய்யுள்

# இளந்தமிழே!

*- சிற்பி பாலசுப்பிரமணியம்*

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **"மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு" கவிஞர் குறிப்பிடும் பழமைநலம்,**

   க) பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தது   உ) பொதிகையில் தோன்றியது

   ங) வள்ளல்களைத் தந்தது

   அ) க மட்டும் சரி   ஆ) க, உ இரண்டும் சரி

   இ) ங மட்டும் சரி   ஈ) க, ங இரண்டும் சரி   **[விடை: ஈ]**

### குறுவினா

1. **கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட, தமிழின் துணை வேண்டும் என்கிறார் ?**

   செந்நிறத்து வானம் போல் சிவந்த கைகள் உடைய உழைக்கும் தொழிலாளர்களின் திரண்ட தோள் மீது வீற்றிருக்கும் வியர்வை முத்துக்களைப் பாட தமிழின் துணை வேண்டும் என்கிறார் சிற்பி.

### சிறுவினா

1. **'செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான் செந்நிறத்துப் பூக்காடாம் வான மெல்லாம்' தொடர் வெளிப்படுத்தும் காட்சி நயத்தை விளக்குக.**

   - கதிரவன் தன் கதிர்களைச் சுருக்கிக் கொண்டு மேற்கு நோக்கி மறைவது இயற்கை.
   - ஆனால் கவிஞர் செம்மைமிகு சூரியன் மாலையில் மலைமுகட்டில் தன் தலை சாய்க்கிறான் என்கிறார்.
   - கதிரவனின் கதிரொளி பட்டு வானமெனும் காடெல்லாம் பூக்காடாய் மாறின என்று சிற்பி நயம்பட விளக்குகிறார்.

2. **பின்வரும் இரு பாக்களின் கருத்துகளிலுள்ள வேறுபாட்டை எடுத்துக்காட்டுக.**

| | |
|---|---|
| பழையன கழிதலும் புதியன புகுதலும்<br>வழுவல கால வகையி னானே<br>- *நன்னூல்* | மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு<br>மெய்சிலிர்க்கத் தமிழ்க்குயிலே ! கூவி வா, வா!<br>- *சிற்பி பாலசுப்பிரமணியம்* |

| நன்னூல் | சிற்பி பாலசுப்பிரமணியம் |
|---|---|
| பழையவற்றை ஒதுக்கி புதியவற்றைப் புகுத்த வேண்டும். | பழமை செயல்பாடுகளுக்குப் புதிய வடிவம் கொடுக்க வேண்டும். |
| தேவையற்ற சொல், பொருள், வழக்கம் எல்லாம் காலமாறுதலுக்கு ஏற்ப புதிய சொல், பொருள், வழக்கம் தேவை. | தமிழ்த்தாயின் பழமைமிகு செயல்பாடுகளுக்குப் புதிய வடிவம் கொடுத்து தமிழ்க்குயிலே மெய்சிலிர்க்குமாறு பாட வா. |

## நெடுவினா

1. **தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.**

இளமைப் பொருந்திய தமிழின் திறத்தைக் கவிஞர் சிற்பி பின்வருமாறு பாடுகிறார்.

- செம்மைமிகு சூரியன் மாலையில் மலைமுகட்டில் மறையும் போது வானம் எனும் காடு பூக்காடாய்க் காட்சி தருகிறது.
- உழைப்பாளர்களின் கைகள் சிவந்து திரண்ட தோள்களில் வியர்வைத் துளிகள் முத்துமுத்தாய்க் காணப்படுகிறது.
- இக்காட்சியெல்லாம் நான் வியந்து பாட அன்னைத் தமிழே உன் துணை வேண்டும்.
- பெருகி வரும் கவிதைகளுக்கு உணவாக இருக்கும் தமிழே!
- தமிழே நீ! பாண்டியனின் தமிழ்ச் சங்கத்தில் தவழ்ந்திருந்தாய்.
- பாரி முதலான வள்ளல்கள் எழுவரை இம்மண்ணுக்குத் தந்தாய்.
- உன் பழமையான நலன்களை எல்லாம் புதுப்பித்து, தமிழ்க்குயிலே நீ மெய்சிலிர்க்கப் பாடி வா.
- கூண்டினை உடைத்தெறிந்து வெளிவரும் சிங்கம் போல் வா.
- குளிர் பொதிகையில் தோன்றிய தென் தமிழே சீறி வா என்று சிற்பி தமிழின் சீரிளமையைத் திறம் வியந்து பாடுகிறார்.

## இலக்கணக் குறிப்பு

| | | |
|---|---|---|
| **செம்பரிதி, செந்தமிழ், செந்நிறம்** | - | பண்புத்தொகைகள் |
| **முத்து முத்தாய்** | - | அடுக்குத்தொடர் |
| **சிவந்து** | - | வினையெச்சம் |
| **வியர்வை வெள்ளம்** | - | உருவகம் |

## உறுப்பிலக்கணம்

| | |
|---|---|
| **சாய்ப்பான் = சாய் + ப் + ப் + ஆன்**<br>சாய் - பகுதி<br>ப் - சந்தி<br>ப் - எதிர்கால இடைநிலை<br>ஆன்- படர்க்கை ஆண்பால் வினைமுற்று விகுதி | **விம்முகின்ற = விம்மு + கின்று + அ**<br>விம்மு - பகுதி<br>கின்று - நிகழ்கால இடைநிலை<br>அ - பெயரெச்ச விகுதி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வியந்து | = | விய + த் (ந்) + த் + உ | இருந்தாய் | = | இரு + த் (ந்) + த் + ஆய் |
| விய | - | பகுதி | இரு | - | பகுதி |
| த் (ந்) | - | சந்தி, ('ந்' ஆனது விகாரம்) | த் (ந்) | - | சந்தி, ('ந்' ஆனது விகாரம்) |
| த் | - | இறந்தகால இடைநிலை | த் | - | இறந்தகால இடைநிலை |
| உ | - | வினையெச்ச விகுதி | ஆய் | - | முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி |

## புணர்ச்சி விதி

1. **செம்பரிதி = செம்மை + பரிதி**
ஈறுபோதல் என்ற விதிப்படி, மை கெட்டு செம் + பரிதி என்பது செம்பரிதி எனப் புணர்ந்தது.

2. **வானமெல்லாம் = வானம் + எல்லாம்**
உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே என்ற விதிப்படி, (ம் + எ = மெ) வானெமல்லாம் எனப் புணர்ந்தது.

3. **உன்னையல்லால் = உன்னை + அல்லால்**
   - இஈஐ வழி யவ்வும் என்ற விதிப்படி, உன்னை + ய் + அல்லால் என்றானது.
   - உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே என்ற விதிப்படி, (ய் + அ = ய) உன்னையல்லால் எனப் புணர்ந்தது.

4. **செந்தமிழே = செம்மை + தமிழே**
   - ஈறுபோதல் என்ற விதிப்படி, மை கெட்டு செம் + தமிழே என்றானது.
   - முன்னின்ற மெய் திரிதல் என்ற விதிப்படி, (ம் திரிந்து ந் தோன்றி), செந்தமிழே எனப் புணர்ந்தது.

# கூடுதல் வினாக்கள்

## பலவுள் தெரிக

1. **'பொதிகை' என்பது எந்த மலையைக் குறிக்கும்?**
அ) குற்றால மலை  ஆ) விந்திய மலை  இ) இமய மலை  ஈ) சாமிமலை  [விடை: அ]

2. **சிற்பி பாலசுப்பிரமணியம் எந்நூலை மொழிபெயர்த்தமைக்காகச் சாகித்திய அகாதெமி விருதினைப் பெற்றார்?**
அ) அக்கினி  ஆ) ஒளிப்பறவை  இ) அக்கினிசாட்சி  ஈ) சூரியநிழல்  [விடை: இ]

3. **'சாய்ப்பான்' என்பதன் சரியான பகுபத பிரிப்பு முறை**
அ) சாய்ப்பு + ஆன்  ஆ) சாய் + ப் + ஆன்
இ) சாய் + ப் + ப் + அன்  ஈ) சாய் + ப் + ப் + ஆன்  [விடை: ஈ]

4. **கவிஞர் சிற்பி எழுதிய எந்தப் படைப்பிலக்கியத்திற்கு சாகித்திய அகாதெமி விருது கிடைத்தது?**
அ) ஒரு கிராமத்தின் கதை  ஆ) ஒரு கிராமமே அழுதது
இ) ஒரு கிராமத்தின் நதி  ஈ) ஒரு புளியமரத்தின் கதை  [விடை: இ]

5. **'செந்தமிழ்' – எந்தப் புணர்ச்சி விதிகளின் அடிப்படையில் சரியாகப் புணரும்?**
அ) ஈறுபோதல், இனமிகல்  ஆ) ஈறுபோதல், முன்னின்ற மெய்திரிதல்
இ) ஈறுபோதல், தன்னொற்றிரட்டல்  ஈ) ஈறுபோதல்  [விடை: ஆ]

6. **'வியர்வை வெள்ளம்' – இலக்கணக் குறிப்புத் தருக.**
ஆ) உவமையாகுபெயர் ஆ) கருவியாகு பெயர்
இ) உருவகம் ஈ) உவமைத்தொகை **[விடை: இ]**

7. **இவற்றுள் எது கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் எழுதிய நூல்?**
ஆ) சூரிய காந்தி ஆ) சூரிய பார்வை இ) ஒளிப்பூ ஈ) சூரிய நிழல் **[விடை: ஈ]**

8. **கருத்து 1 : பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தவள் தமிழ்த்தாய்.**
**கருத்து 2 : விம்முகின்ற தோள்கள் செந்நிறத்துப் பூக்காடானது.**
அ) கருத்து 1 சரி ஆ) கருத்து 2 சரி
இ) இரண்டும் கருத்தும் தவறு ஈ) கருத்து 1 சரி, 2 தவறு **[விடை: ஈ]**

9. **'இளந்தமிழே' என்னும் பாடல் நூலின் ஆசிரியர்**
அ) சிற்பி பாலசுப்பிரமணியம் ஆ) பெருந்தேவனார்
இ) தமிழண்ணல் ஈ) மு. வரதராசனார் **[விடை: அ]**

10. **பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தவள்**
அ) கோப்பெருந்தேவி ஆ) வேண்மாள்
இ) தமிழன்னை ஈ) ஔவையார் **[விடை: இ]**

11. **.............. முதலான வள்ளல்களை ஈன்று தந்தவள் தமிழன்னை.**
அ) சடையப்ப வள்ளல் ஆ) சீதக்காதி
இ) பாரி ஈ) நெடுங்கிள்ளி **[விடை: இ]**

12. **எம்மருமைச் செந்தமிழே! உன்னையல்லால் ஏற்றதுணை வேறுண்டோ – என்று பாடியவர்**
அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்
இ) சிற்பி பாலசுப்பிரமணியம் ஈ) திரு. வி. க **[விடை: இ]**

13. **'இளந்தமிழே' என்னும் சிற்பி பாலசுப்பிரமணியத்தின் பாடலின் இடம்பெற்றுள்ள பாவகை**
அ) நேரிசை ஆசிரியப்பா ஆ) அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
இ) கலி விருத்தம் ஈ) எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் **[விடை: ஈ]**

14. **பொருத்திக் காட்டுக.**

| | | | |
|---|---|---|---|
| i) | செம்பரிதி | - | உருவகம் |
| ii) | முத்துமுத்தாய் | - | வினையெச்சம் |
| iii) | சிவந்து | - | அடுக்குத்தொடர் |
| iv) | வியர்வைவெள்ளம் | - | பண்புத்தொகை |

அ) 4321 ஆ) 3412 இ) 2143 ஈ) 3214 **[விடை: அ]**

15. **செம்பரிதி – இச்சொல்லுக்குரிய புணர்ச்சி விதியைக் கண்டறிக.**
அ) ஈறுபோதல் ஆ) இனமிகல்
இ) ஆதிநீடல் ஈ) முன்நின்ற மெய்திரிதல் **[விடை: அ]**

16. **உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே – என்ற விதிக்குப் பொருத்தமான சொல்லைக் கண்டறிக.**
அ) உன்னையல்லால்ஆ) வானமெல்லாம் இ) செந்தமிழே ஈ) செம்பரிதி **[விடை: ஆ]**

17. **'இளந்தமிழே' என்னும் கவிதை சிற்பி பாலசுப்பிரமணியத்தின் எக்கவிதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது?**
அ) சூரிய நிழல் ஆ) ஒரு கிராமத்து நதி இ) ஒளிப்பறவை ஈ) நிலவுப்பூ **[விடை: ஈ]**

18. **சிற்பியின் பன்முகங்களில் பொருந்தாததைக் கூறுக.**
அ) கவிஞர் ஆ) ஓவியர்
இ) பேராசிரியர் ஈ) மொழிபெயர்ப்பாளர் [விடை: ஈ]

19. **சிற்பி பாலசுப்பிரமணியம் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றிய பல்கலைக்கழகம்**
அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) தமிழ் ஈ) காமராசர் [விடை: அ]

20. **சிற்பி பாலசுப்பிரமணியம் எத்தனை முறை சாகித்திய அகாதெமி விருது பெற்றுள்ளார்?**
அ) மூன்று ஆ) இரு இ) நான்கு ஈ) பல [விடை: ஆ]

21. **சிற்பி பாலசுப்பிரமணியன் சாகித்திய அகாதெமியின் .............. இருக்கிறார்.**
அ) தலைவராக ஆ) செயலாளராக இ) பொருளாளராக ஈ) உறுப்பினராக [விடை: ஈ]

## குறுவினா

1. **தொழிலாளர்களின் கைகள் எதனைப் போலச் சிவந்துள்ளதாகக் கவிஞர் சிற்பி கூறுகிறார் ?**
மாலையில் மறையும் கதிரவனின் கதிரொளி போல தொழிலாளரின் கைகள் சிவந்துள்ளதாகக் கூறுகிறார்.

2. **தமிழ்மொழியின் பழமைநலம் எவை ?**
- தமிழ்மொழி பாண்டியர்களின் அவையிலே தன்னிகரற்ற செம்மொழியாய் ஆட்சி செய்தது.
- பாரி போன்ற வள்ளல்கள் பலரை தமிழ் மண்ணிற்குத் தந்த பழமை நலம் கொண்ட மொழி.

3. **கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் அவர்களின் ஆசை என்ன ?**
'தமிழ் பல புதிய உள்ளடக்கங்களால் தன்னைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டும்; பழஞ்சிறப்பைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும்', என்பதே கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் அவர்களின் ஆசை ஆகும்.

4. **கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் எழுதிய கவிதை நூற்களில் சிலவற்றை எழுதுக.**
ஒளிப்பறவை, சர்ப்பயாகம், சூரிய நிழல், ஒரு கிராமத்து நதி, பூஜ்யங்களின் சங்கிலி.

5. **சிற்பி பாலசுப்பிரமணியத்தின் பன்முகங்களைக் குறிப்பிடுக.**
கவிஞர், பேராசிரியர், மொழிபெயர்ப்பாளர், இதழாசிரியர்.

6. **சிற்பி பாலசுப்பிரமணியம் எழுதிய உரைநடை நூல்கள் யாவை?**
இலக்கியச் சிந்தனைகள், மலையாளக்கவிதை, அலையும் சுவரும்.

7. **சிற்பி பாலசுப்பிரமணியத்தின் கவிதைகள் எம்மொழிகளில் பெயர்க்கப்பட்டுள்ளன?**
ஆங்கிலம், கன்னடம், மலையாளம், மராத்தி, இந்தி.

8. **சிற்பி பாலசுப்பிரமணியம் எத்தனை முறை சாகித்திய அகாதெமி விருதைப் பெற்றுள்ளார்?**
- சாகித்திய அகாதெமி விருதைப் சிற்பி பாலசுப்பிரமணியன் இரு முறை பெற்றுள்ளார் .
- மொழிபெயர்ப்புக்காகவும், 'ஒரு கிராமத்து நதி' என்னும் கவிதை நூலிற்காகவும் சாகித்திய அகாதெமி விருதைப் சிற்பி பாலசுப்பிரமணியம் பெற்றுள்ளார்.

## சிறுவினா

1. **குளிர் பொதிகைத் தென்தமிழ் ஏன் சீறி வர வேண்டும் எனச் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுகிறார்?**
- உள்ளத்தில் பொங்கிவரும் உணர்வுகளை உணர்ச்சி மிகு கவிதையாக எழுத முத்தமிழே உதவி செய்கின்றது.

- பாண்டியமன்னர்கள் அமைத்த சங்கத்திலே, தன்னிகரற்ற செம்மொழியாய் இருந்து ஆட்சிச் செய்தது.
- பாரி போன்ற வள்ளல்கள் பலரை இத்தமிழ் மண்ணிற்குத் தந்தது.
- அன்றிருந்த தமிழர் நலமும் தமிழ்நாட்டுப் பொதுமை நலமும் மீண்டும் பிறப்பதற்கு நீ குயில் போலக் கூவி வர வேண்டும்.
- இன்று தமிழர்களைச் சூழ்ந்திருக்கும் அடிமைத்தனமும், அறியாமையும் அகன்றிட அவர்கள் சிறைப்பட்டிருக்கும் கூட்டினை உடைத்திட நீயும் சிங்கம் போலச் சீறி புறப்பட்டு வர வேண்டும்.

**2. கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் பற்றிக் குறிப்பு வரைக.**

| | | |
|---|---|---|
| **பெயர்** | : | பாலசுப்பிரமணியம். |
| **சிறப்புப் பெயர்** | : | சிற்பி (எழுத்துகளைச் செதுக்குவதால் சிற்பி எனப்பட்டார்). |
| **பெற்றோர்** | : | சி. பொன்னுசாமி - கண்டியம்மாள். |
| **ஊர்** | : | ஆத்துப்பொள்ளாச்சி, கோவை. |
| **பணி** | : | பாரதியார் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவர் .<br>சாகித்திய அகாதெமியின் செயற்குழு உறுப்பினர். |
| **விருது** | : | "ஒரு கிராமத்து நதி" எனும் கவிதை நூலுக்குச் சாகித்திய அகாதெமி விருது. |
| **படைப்புகள்** | : | ஒளிப்பறவை, சர்ப்பயாகம், சூரிய நிழல், பூஜ்யங்களின் சங்கிலி. |

## கற்பவை கற்றபின்

பக்கம்: 3

**தமிழ்மொழிப் பாடத்தில் மொழி வாழ்த்துப் பாடல் இடம் பெறுவதன் நோக்கம் குறித்த கருத்துகளைத் தொகுத்துக் கலந்துரையாடல் நிகழ்த்துக.**

| | | |
|---|---|---|
| வேதன் | : | எனக்கு மொழி வாழ்த்து வைப்பு முறையைப் பற்றிய ஒரு விளக்கம் தேவை. |
| மதன் | : | சொல்லுங்க! மொழி வாழ்த்து வைப்பு முறையில் என்ன விளக்கம் வேண்டும்? |
| வேதன் | : | இப்போதெல்லாம் இறைவாழ்த்து இருந்த இடத்தில் மொழி வாழ்த்து வைக்கப்படுகிறதே, அதுதான். |
| மதன் | : | அது இடமாற்றம் இல்லை. ஒதுக்கப்படுவதும் இல்லை. |
| வேதன் | : | நேற்று போல் இன்று இல்லை என்கிறீர்களா? |
| மதன் | : | அதாவது, ஒரு செயலைத் தொடங்குவதற்கு முன் விருப்ப தெய்வங்களை வணங்கிவிட்டுத் தொடங்குவதுதான் வழக்கம். |
| வேதன் | : | தற்போது புத்தகங்களில் அப்படி இல்லையே. |
| மதன் | : | வணங்குவது வேறு, இடம் பெறவில்லை என்பது வேறு. இது மொழிப்புத்தகம். எனவே, மொழியைத் தெய்வமாக உருவகப்படுத்தப்பட்டுள்ளது. |
| வேதன் | : | மொழி தெய்வத்தை எவ்வாறு வணங்கலாம்? |
| மதன் | : | மொழி தெய்வத்தைப் பல புலவர்கள் பலவாறு போற்றியுள்ளனர். பாரதிதாசன் தமிழை என்னுயிர் என்பேன் கண்டீர் - என்பார். |
| வேதன் | : | அப்போ, மொழிப்பாடங்களில் மொழிக் கடவு(ளை)ள் வாழ்த்தை வைப்பது சரிதானா? |
| மதன் | : | நிச்சயமாக, மொழி வளம், மொழி சிறக்க, மொழி தெய்வத்தை வணங்க வேண்டும் என்பதால் மொழி வாழ்த்தினை இடம் பெறச் செய்வது சாலச்சிறந்தது. |
| வேதன் | : | நன்றி மதன். |
| மதன் | : | நன்றி வேதன், மீண்டும் சந்திப்போம். |

www.GRLVidya.in

# இயல் 1 உரைநடை உலகம்

# தமிழ்மொழியின் நடை அழகியல்

*- தி.சு. நடராசன்*

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல்**

அ) யாப்பருங்கலக்காரிகை ஆ) தண்டியலங்காரம்

இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல் **[விடை: இ]**

2. **கருத்து 1 : இயல்பு வழக்கில், தொடரமைப்பு என்பது எழுவாய், பயனிலை என்று வருவதே மரபு.**
**கருத்து 2 : தொடரமைப்பு, சங்கப் பாடல்கள் பலவற்றில் பிறழ்ந்து வருகிறது.**

அ) கருத்து 1 சரி ஆ) கருத்து 2 சரி

இ) இரண்டு கருத்தும் சரி ஈ) கருத்து 1 சரி 2 தவறு **[விடை: இ]**

3. **பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| அ) | தமிழ் அழகியல் | - | 1. பரலி சு. நெல்லையப்பர் |
| ஆ) | நிலவுப்பூ | - | 2. தி. சு. நடராசன் |
| இ) | கிடை | - | 3. சிற்பி பாலசுப்பிரமணியம் |
| ஈ) | உய்யும் வழி | - | 4. கி. ராஜநாராயணன் |

அ) 4, 3, 2, 1 ஆ) 1, 4, 2, 3 இ) 2, 4, 1, 3 ஈ) 2, 3, 4, 1 **[விடை: ஈ]**

### குறுவினா

1. **நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.**

- நடைபெற்றியலும் (கிளவியாக்கம், 26) என்றும் நடை நவின்றொழுகும் (செய் 135) என்றும் சில சொற்றொடர்களைத் தொல்காப்பியம் கையாண்டிருக்கிறது.
- கவிதையின் இயங்காற்றல்தான் நடை என்கிறது தொல்காப்பியம்.
- மொழிக்குள் இருக்கும் ஒரு வலிமைமிக்க ஆற்றல் கவிதைக்காக, இலக்கியத்துக்காகத் தன்னை வெளிப்படுத்திக் கொள்வதே நடை எனப்படும்.

2. **“படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்**
**கடாஅ யானைக் கலிமான் பேக” - இச் சங்கக் கவிதையின் அடிகளில் ஓசை நயமிக்க சொற்களையும் அவற்றிற்கான இலக்கணக் குறிப்புகளையும் எடுத்து எழுதுக.**

**ஓசை நயமிக்கச் சொற்கள் :**

படாஅம் ஈத்த, கெடாஅ நல்லிசை, கடாஅயானை, நல்லிசை.

**இலக்கணக் குறிப்புகள் :**

| | | |
|---|---|---|
| படாஅம், கெடாஅ, கடாஅ | - | செய்யுளிசையளபெடைகள் |
| ஈத்த | - | பெயரெச்சம் |
| நல்லிசை | - | பண்புத்தொகை |

3. **விடியல், வனப்பு - இரு சொற்களையும் ஒருங்கிணைத்துத் தொடர் அமைக்க.**

பூத்துக் குலுங்கும் பூக்களின் மணத்திலும் பறவைகளின் ஒலிகளிலும் **விடியலின்** வெளிச்சமாக உதிக்கும் கதிரவனின் தோற்றம் இயற்கையின் **வனப்பை** எடுத்துரைக்கும்.

## சிறுவினா

1. **சங்கப்பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் - விளக்குக.**

- எந்தத் தொன்மையான மொழியும் சமிக்ஞையிலிருந்தும், இசையிலிருந்தும் தான் தோன்றுகிறது.
- சங்கப்பாடல்களில் ஓசையும் பொருளும் இணைந்து கலைவடிவம் கொள்கின்றன.
- இதனையே அந்தப் பனுவல் பாடல்களின் ஒலிப்பின்னல் என்கிறோம். இந்த ஒலிக்கோலங்கள் உணர்ச்சிகளைக் காட்டும் விதமாக அமைக்கப்பட்டுள்ளன.

**கடந்தடு தானை மூவிருங் கூடி**
**உடன்றனிர் ஆயினும் பறம்பு கொளற்கரிதே;**
**முந்நூறு ஊர்த்தே தண் பறம்பு நன்னாடு;**
**முந்நூறு ஊரும் பரிசிலர் பெற்றனர்;**

- உயிர் ஒலிகள் குறிப்பாக நெடில் ஒலிகளின் வருகையும், சில ஒலிகளும் சில சொற்களும் திரும்பவரல் தன்மை பெற்றிருப்பதும், இவற்றோடு சேர்ந்து நிகழ்த்தப்பெறும் சொல் விளையாட்டுகளும் சங்கப்பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாக விளங்கியதை உணர்த்தும்.

**சான்று :**

'படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசை கடாஅ யானைக்' - இவ்வரிகள் ஒலிக்கோலத்தின் பண்பை உணர்த்துகிறது.

## நெடுவினா

1. **கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக.**

**கவிதையின் நடையைக் கட்டமைப்பன:**

பாட்டு அல்லது நடைஅழகியியல் கூறுகளில் ஒலிக்கோலங்களும் சொற்களின் புலமும் தொடரியல் போக்குகளும் முக்கியமானவை.

**கவிதை - நடையியல்:**

மொழியின் தனிச்சிறப்பான கூறுகளும், அவற்றைக் கையாளுகின்ற வகைமைகளும் கவிதையின் உந்து சக்தியாக அமைகின்றன. மொழிக்குள் இருக்கும் ஒரு வலிமைமிக்க ஆற்றல் கவிதைக்காக, இலக்கியத்துக்காகத் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது. கவிதையின் இயங்காற்றல்தான் நடை. நடைபெற்றியலும் (கிளவியாக்கம் - 26) என்று தொல்காப்பியம் கூறுகிறது.

**ஒலிக்கோலங்கள்:**

தொன்மையான மொழிகள் யாவும் சமிக்ஞையிலிருந்தும், இசையிலிருந்தும்தான் தொடங்குகிறது. ஓசையும் பொருளும் இணைந்து கலைவடிவம் கொள்கின்றன. இதையே, அந்தப் பனுவலின் - பாடலின் ஒலிப்பின்னல் என்கிறோம்.

**சான்று:** "கடந்தடு தானை மூவிருங்கூடி உடன்றனிர் ஆயினும் பறம்பு கொளற்கரிதே"

இப்பாடலில் க, த, ட, ற முதலிய வல்லின மெய்கள் பிற மெல்லின இடையின மெய்களைக் காட்டிலும் அதிகமாக வருகிறது. இதன் அடிப்படையில் ஒப்பிட்டுப் பார்த்து ஒலிக்கோலத்தின் வலிமையை அறியலாம்.

**படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசை**
**கடாஅ யானைக் கலிமான் பேக** (புறம் - 145)

இதில் பல உயிர் ஒலிகள் வருகையும் திரும்பவரல் தன்மையும் இவற்றோடு சேர்ந்து நிகழ்த்தப்பெறும் சொல் விளையாட்டுகளும் இங்கே கவனத்திற்குரியன. ஒலிக்கோலம் சங்கப்பாடல்களின் ஒரு முக்கியப்பண்பு.

### சொற்புலம் :

சொல்வளம் என்பது ஒருபொருள் குறித்த பல சொல், பல பொருள் குறித்த ஒரு சொல், பலதுறை, பலசூழல், பல புனைவுகளுக்கும் உரியதாய் வருதலும், உணர்வும், தெளிவும் கொண்டதாய் வருதலும், எனப் பலவாறு செழிப்பான தளத்தில் சொற்கள் விளைச்சல் கண்டிருப்பதைக் குறிக்கும். சான்றாக, முல்லைக்கலியில் காளைகளில் பல இனங்களைக் காட்டுகின்ற சொற்கள் உள்ளன. சொல்வளம் ஒரு பண்பாட்டின் அடையாளம். சொல்வளம் என்பது தனிச்சொற்களாய் நிறைந்து அமைவதையும் குறிக்கும்.

### தொகைநிலை :

சங்க இலக்கிய மொழியின் அடையாளமாக உள்ள ஒரு பண்பு இது. இதனைத் தொகைநிலை என்று தொல்காப்பிய எச்சவியல் பேசுகிறது. தொகைமொழி என்பது செறிவாக்கப்பட்ட ஒரு வடிவமைப்பு.

அது வாக்கிய அமைப்பில் ஒரு சொல் போலவே நடைபெறும்.

**சான்று:** வைகுறுவிடியல், கவினுறு வனப்பு, தீநீர் என்பன.

### தொடரியல் போக்குகள் :

ஒலிக்கோலமும், சொற்புலமும் சொற்றொடர் நிலையும் பாடலின் தளத்தை ஏர் நடத்திப் பண்படுத்திப் போகின்றன என்றால், பாத்தி கட்டி வரப்புயர்த்தும் பணிகளைத் தொடரியல் வடிவம் செய்கின்றது. பரிமாறப்படும் உணர்வுகளுக்கும் செய்திகளுக்கும் ஏற்பத் தொடர்கள் ஏறியும் இறங்கியும் திரும்பியும் சுழன்றும் இயங்குகின்றன.

### கவிதை மறுதலைத்தொடர் :

தொடரமைப்பு என்பது எழுவாய் + செயப்படுபொருள், அல்லது பிறவற்றுடன் கூடிய அமைப்பு + பயனிலை என்று வருவது மரபு. இது சங்கப்பாடல்களில் பலவற்றில் பிறழ்ந்து வருகிறது.

**சான்று:** பேரெயின் முறுவலாரின், நம்பி நெடுஞ்செழியனுடைய சாவுச்சடங்கு பாடல்:

**"இடுகவொன்றோ, சுடுகவொன்றோ**
**படுவழிப்படுக இப்புகழ் வெய்யோன் தலையே"** (புறம் - 239)

இதன் இறுதி அடி பிறழ்வோடு அமைந்துள்ளது. ஏனைய 20 அடிகளில் தொடர் வரிசையாகவும் நேர்படவும் செல்கின்றன. ஒவ்வோர் அடியும் வினைமுற்றுகளோடும், தன்னிறைவோடும் முடிகின்றன. இப்படி 18 பண்புகளை வரிசைப்படுத்திய பிறகு, தொகுத்துச் சொல்வதுபோல, (ஆங்குச் செய்பவையெல்லாம் செய்தனன் ஆதலின்) கூறிவிட்டுப் போடா போ - புதைத்தால் புதை; சுட்டால் சுடு என்று அலுத்துக் கொள்கிறது.

### இறுதியாக :

நடையியல் என்பது வடிவமைப்பின் பகுதிகளையும் முழுமையினையும் சார்ந்தே இருக்கிறது. அத்தகைய நடை அழகியலைக் கட்டமைப்பதற்குச் சங்க இலக்கியமே முதன்மை ஆதாரம். மேலும் சங்க இலக்கியம் அதனுடைய தனித்துவ மிக்க சமூக - பண்பாட்டுத்தளத்தில் குறிப்பிட்ட சில பண்புகளையும் போக்குகளையும் சொந்த மரபுகளாகக் கொண்டுவிட்டது. எனவே, கவிதையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகள் சங்க இலக்கியங்களில் பரவிக் காணப்படுகின்றன.

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **செய்யுளை ஓர் உள்ளமைப்பாகக் கூறும் நூல்**

அ) நன்னூல் ஆ) தொல்காப்பியம்
இ) யாப்பருங்கலக்காரிகை ஈ) தண்டியலங்காரம் [விடை: ஆ]

2. **காளைகளில் பல இனங்களைக் காட்டும் நூல்**

அ) தொல்காப்பியம் ஆ) முல்லைக்கலி
இ) புறநானூறு ஈ) பதிற்றுப்பத்து [விடை: ஆ]

3. **பாடலின் தளத்தைப் பாத்திகட்டி வரப்புயர்த்தும் பணியைச் செய்வது**

அ) தொடரியல் வடிவம் ஆ) ஒலிக்கோலம்
இ) சொற்றொடர் நிலை ஈ) சொற்புலம் [விடை: அ]

4. **கருத்து 1 : சொல்லில்தான் உணர்வும் பொருளும் பொதிந்து கிடக்கின்றன.**
**கருத்து 2 : தமிழ் அழகியலைக் கட்டமைப்பதற்குச் சங்க இலக்கியமே முதன்மை ஆதாரம்.**

அ) கருத்து 1 சரி ஆ) கருத்து 2 சரி
இ) கருத்து 1 சரி, 2 தவறு ஈ) இரண்டு கருத்தும் சரி [விடை: ஈ]

5. **கருத்து 1 : முல்லைக்கலியில் எருதுகளின் பல இனங்களைக் காட்டும் சொற்கள் நிரம்பிக் கிடக்கின்றன.**
**கருத்து 2 : சொல்வளம் ஒரு பண்பாட்டின் அடையாளமாகவும் இருக்கிறது.**

அ) கருத்து 1 தவறு ஆ) கருத்து 1 சரி, 2 தவறு
இ) கருத்து இரண்டும் சரி ஈ) கருத்து 1 தவறு, 2 சரி [விடை: இ]

6. **கருத்து : தொன்மையான மொழி சமிக்ஞையிலிருந்தும் இசையிலிருந்தும் தான் தொடங்குகிறது.**
**விளக்கம் : மொழித்தோன்ற அடிப்படையாக இருப்பது ஒலியே. ஒலியை வெவ்வேறு வடிவங்களில் உச்சரிக்கும் போது மொழித் தோன்றுகிறது.**

அ) கருத்து சரி விளக்கம் தவறு ஆ) கருத்தும் விளக்கமும் சரி
இ) கருத்து தவறு விளக்கமும் தவறு ஈ) கருத்து தவறு விளக்கம் சரி [விடை: ஆ]

7. **பொருத்தமானதைக் கண்டறிக.**

அ) பாவகை - ஐந்து
ஆ) வஞ்சி - வெண்பா நடைத்தே
இ) பனிநீர் - தொகை மொழி
ஈ) காமர் வனப்பு - தொடரியல் போக்கு [விடை: இ]

8. **பொருத்தமானதைக் கண்டறிக.**

அ) கடாஅ யானைக் கலிமான் பேக - முல்லைக்கலி
ஆ) புணரின் புணராது பொருளே - தொல்காப்பியம்
இ) இவன் தந்தை தந்தை - நற்றிணை
ஈ) யாமும் பாரியும் உளமே - புறநானூறு [விடை: ஈ]

9. **பொருந்தாததைத் தேர்க.**

அ) கன்னி விடியல் - தொகை மொழி
ஆ) பொய்படு சொல் - மறித்தாக்கம்
இ) சங்கப்பாடல்கள் - மறுதலைத் தொடர்
ஈ) கி.ராஜநாராயணன் - கிடை [விடை: ஆ]

10. **தமிழ்மொழியின் நடை அழகியல் என்னும் கட்டுரையின் ஆசிரியர்**

அ) தி.சு. நடராசன் ஆ) ஔவை நடராசன்
இ) சிற்பி பாலசுப்பிரமணியம் ஈ) தமிழண்ணல் [விடை: அ]

11. **................ இழுமெனும் மொழியால் விழுமியது பயக்கும் வகையின் இலக்கியங்கள் படைக்கப்பட்டுள்ளன.**

அ) தமிழில் ஆ) ஆங்கிலத்தில்
இ) தெலுங்கில் ஈ) வடமொழியில் [விடை: அ]

12. **மலரும் மணமும் போல கவிதையுடன் இரண்டறக் கலந்திருப்பது**

அ) தமிழர்களின் அழகுணர்வு ஆ) தலைவன் தலைவியின் அன்புணர்வு
இ) வள்ளலின் வள்ளன்மையுணர்வு ஈ) பக்தர்களின் தெய்வ உணர்வு [விடை: அ]

13. **அறியப்பட்ட வரலாற்றுக் காலத்தின் தொடக்கமாகத் தோற்றம் தருவது**

அ) புராணம் ஆ) சங்க இலக்கியம் இ) கல்வெட்டு ஈ) நாணயம் [விடை: ஆ]

14. **அழகு என்பது ................ செய்தி.**

அ) மனிதரின் ஆ) பேரண்டத்தின் இ) காதலரின் ஈ) கடவுளரின் [விடை: ஆ]

15. **அழகியலை உருவாக்குவதற்குத் தளம் அமைத்துத் தருவது**

அ) தொல்காப்பியம் ஆ) சங்க இலக்கியம்
இ) புராணம் ஈ) மனிதநடத்தை [விடை: அ]

16. **இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கணம்**

அ) தொல்காப்பியம் ஆ) நன்னூல்
இ) தொன்னூல் விளக்கம் ஈ) தண்டியலங்காரம் [விடை: அ]

17. **இலக்கியத்தின் '................' பற்றித் தமிழ் இலக்கிய மரபில் அழுத்தமான கருத்து உண்டு.**

அ) நயம் ஆ) பயன் இ) நிலை ஈ) ஈடுபாடு [விடை: ஆ]

18. **இலக்கியத்தின் நோக்கம் அல்லது அறிவியல் சார்ந்த கருத்துநிலைகள் கலை உருவாக்கத்தின் போதே சரிவர இணைந்திருக்க வேண்டும் என்று கூறும் நூல்**

அ) தொல்காப்பியம் ஆ) நன்னூல்
இ) இலக்கண விளக்கம் ஈ) தொன்னூல் விளக்கம் [விடை: அ]

19. **சங்க இலக்கியம் பாடற்பொருள்களாக வடிவமைத்துள்ளவை**

i) அகத்திணைச் சார்ந்த செய்திகள் ii) புறத்திணைச் சார்ந்த செய்திகள்

அ) i - சரி ஆ) ii - தவறு
இ) இரண்டும் சரி ஈ) i - சரி ; ii - தவறு [விடை: இ]

20. **அகன் ஐந்திணைகளைப் பேசுவது**

அ) நன்னூல் ஆ) தண்டியலங்காரம்
இ) தொல்காப்பியம் ஈ) புறப்பொருள் வெண்பாமாலை [விடை: இ]

21. **பா வகைகள் ஆசிரியம் முதற்கொண்டு**
அ) மூன்று ஆ) நான்கு இ) ஒன்று ஈ) இரண்டு **[விடை: ஆ]**

22. **அந்நில மருங்கின் அறமுதலாகிய மும்முதற் பொருட்கும் உரிய என்ப-என்று பாவகைகளோடு அறவியல் கருத்துகளை இணைத்துச்சொல்வது**
அ) சங்க இலக்கியம் ஆ) பரிபாடல் இ) தொல்காப்பியம் ஈ) அகத்தியம் **[விடை: இ]**

23. **பாட்டு அல்லது கவிதையின் நடையியல் கூறுகளில் முக்கியமானவை**
i) ஒலிக்கோலங்கள் ii) சொற்களின் புலம் iii) தொடரியல் போக்குகள்
அ) i, ii - சரி ஆ) ii, iii - சரி
இ) மூன்றும் சரி ஈ) இரண்டு மட்டும் தவறு **[விடை: இ]**

24. **கவிதையின் ................ நடை.**
அ) இயங்காற்றல்தான் ஆ) அழகுதான்
இ) பார்வைதான் ஈ) இயல்புதான் **[விடை: அ]**

25. **'நடைபெற்றியலும்' என்பது தொல்காப்பியத்தின ................ வரும் சொற்றொடர்.**
அ) கிளவியாக்கத்தில் ஆ) மொழியாக்கத்தில்
இ) எழுத்து அதிகாரத்தில் ஈ) இவற்றில் எதுவுமில்லை **[விடை: அ]**

26. **ஆசிரிய நடைத்தே வஞ்சி; ஏனை வெண்பா நடைத்தே கலி-என்று குறிப்பிடும் நூல்**
அ) கலித்தொகை ஆ) தொல்காப்பியம் இ) பரிபாடல் ஈ) குறவஞ்சி **[விடை: ஆ]**

27. **'கடந்தடுதானை மூவிருங்கூடி'-என்று தொடங்கும் பாடலடிகள் இடம்பெற்றுள்ள நூல்**
அ) அகநானூறு ஆ) புறநானூறு இ) கலித்தொகை ஈ) பரிபாடல் **[விடை: ஆ]**

28. **'படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக் கடாஅ யானைக் கலிமான் பேக' என்னும் அடிகள் இடம்பெற்றுள்ள நூல்**
அ) அகநானூறு ஆ) புறநானூறு இ) கலித்தொகை ஈ) பரிபாடல் **[விடை: ஆ]**

29. **'புணரின் புணராது பொருளே; பொருள்வயின் பிரியின் புணராது புணர்வே!' என்னும் அடிகள் இடம்பெற்றுள்ள நூல்**
அ) புறநானூறு ஆ) நற்றிணை இ) அகநானூறு ஈ) கலித்தொகை **[விடை: ஆ]**

30. **நுந்தை தந்தைக்கு இவன்தந்தை தந்தை-என்னும் அடிகள் இடம்பெற்றுள்ள நூல்**
அ) புறநானூறு ஆ) நற்றினை இ) அகநானூறு ஈ) கலித்தொகை **[விடை: அ]**

31. **................ கலியில், காளைகளில் பல இனங்களைக் காட்டுகிற சொற்கள் நிரம்பிக் கிடக்கின்றன.**
அ) குறிஞ்சிக் ஆ) முல்லைக் இ) மருதக் ஈ) பாலைக் **[விடை: ஆ]**

32. **'கிடை' என்னும் குறுநாவலில் ஆடுகளின் அடையாளங்களைப் பல பெயர்களைச் சொல்லி அழைப்பவர்**
அ) இந்திரா பார்த்தசாரதி ஆ) கி. ராஜநாராயணன்
இ) ஜெயகாந்தன் ஈ) ஜெயமோகன் **[விடை: ஆ]**

33. **தொகைநிலை, தொகைமொழி பற்றிப் பேசும் தொல்காப்பியத்தின் இயல்**
அ) எச்சவியல் ஆ) இடையியல் இ) உவமையியல் ஈ) எழுத்தியல் **[விடை: அ]**

34. **'நீர்படு பசுங்கலம்' என்னும் அடிகளுக்குரிய நூல்**
அ) புறநானூறு ஆ) அகநானூறு இ) நற்றிணை ஈ) பரிபாடல் **[விடை: இ]**

**35. நம்பி நெடுஞ்செழியனுடைய சாவுச் சடங்கு, சர்ச்சைக்கு உள்ளானது பற்றிப் பாடியவர்**

அ) பேரெயின் முறுவலார் ஆ) வெள்ளைக்குடி நாகனார்

இ) நரிவெரூஉத்தலையார் ஈ) கோவூர்கிழார் [விடை: அ]

**36. இடுக வொன்றோ, சுடுக வொன்றோ, படுவழிப் படுக, இப்புகழ் வெய்யோன் தலையே-என்ற புறநானூறு அடிகளில் குறிப்பிடப்படும் மன்னர்**

அ) அறிவுடைநம்பி ஆ) நம்பி நெடுஞ்செழியன்

இ) செங்குட்டுவன் ஈ) கிள்ளிவளவன் [விடை: ஆ]

**37. 'தொடியுடைய தோள் மணந்தனன்' எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலின் ஆசிரியர்**

அ) பேரெயின் முறுவலார் ஆ) பொன்முடியார்

இ) கோவூர்கிழார் ஈ) வெள்ளைக்குடி நாகனார் [விடை: அ]

**38. பேரெயின் முறுவலாரின் புறநானூற்றுப் பாடலில் இடம்பெற்றுள்ள பண்புகள்**

அ) 16 ஆ) 18 இ) 15 ஈ) 14 [விடை: ஆ]

**39. தமிழ் அழகியலைக் கட்டமைப்பதற்குச் ................ முதன்மை ஆதாரம்.**

அ) சங்க இலக்கியமே ஆ) சங்கம் மருவிய இலக்கியமே

இ) நீதி இலக்கியமே ஈ) காப்பியமே [விடை: அ]

**40. தமிழ் அழகியல் என்னும் நூலின் ஆசிரியர்**

அ) தி.சு. நடராசன் ஆ) ஔவை நடராசன்

இ) தமிழண்ணல் ஈ) வல்லிக்கண்ணன் [விடை: அ]

**41. ................ கலையைத் தமிழக்கு அறிமுகப்படுத்தியவர்களில் தி. சு. நடராசன் குறிப்பிடத்தக்கவர்.**

அ) திரைக் ஆ) திறனாய்வுக் இ) மொழிபெயர்ப்புக் ஈ) பேச்சுக் [விடை: ஆ]

**42. தி.சு. நடராசன் ................ ஆகப் பணிபுரிந்தார்.**

அ) மாவட்ட ஆட்சியர் ஆ) பேராசிரியர் இ) வழக்குரைஞர் ஈ) மருத்துவர் [விடை: ஆ]

## குறுவினா

**1. இலக்கியம் எவற்றைத் தனக்குரிய அழகியல் சாதனமாக மாற்ற வேண்டியுள்ளது?**

மனித நாக்குகளின் ஈரம்பட்டுக் கிடக்கும் மொழியானது, பேசுபவன், கேட்பவன் ஆகியோருடைய தனிப்பட்ட சூழல்கள் பேசும் போதும், கேட்கும் போதும் தனிச்சூழல்களைத் தனக்குரிய அழகியல் சாதனமாக மாற்ற வேண்டும்.

**2. மொழியின் சிறப்பு வழக்குகளைக் கலையியல் வழக்குகளாக மாற்றுபவை எவை?**

உவமம், உருவகம், எச்சம், குறிப்பு, உள்ளுறை, இறைச்சி முதலியவை மொழியின் இயல்பு வழக்குகளைக் கலையியல் வழக்குகளாக மாற்றுபவையாகும்.

**3. தமிழ் இலக்கியத்தின் பயன்களாகக் கட்டுரையாசிரியர் கூறுவன யாவை?**

அறம், பொருள், இன்பம் அல்லது வேறு ஏதோ ஓர் உயர்ந்த குறிக்கோளை உணர்த்துவனவாக தமிழ் இலக்கியத்தின் பயன்கள் இருக்க வேண்டும்.

**4. 'கலை முழுமை' பற்றித் தொல்காப்பியம் குறிப்பிடுவது யாது?**

'கலை முழுமை', என்பது இலக்கியத்திற்கான நோக்கம் அல்லது அறிவியல் சார்ந்த கருத்துநிலைகள், கலை உருவாக்கத்தின் போதே சரிவர இணைந்திருக்க வேண்டும் என்று தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது.

**5. தமிழ் அழகியலின் நெடும்பரப்புகளென ஆசிரியர் எதனைக் குறிப்பிடுகிறார்?**

சமூக பண்பாட்டு மரபிற்கேற்பவே, கலை படைப்பை, அழகியல் நெறியை, பண்பாட்டின் இலச்சினையாகச் சித்தரிப்பதற்குத் தமிழ்மரபு முன்வந்திருக்கிறது; முன் மொழிந்திருக்கிறது. இதுவே தமிழ் அழகியலின் நெடும்பரப்பு ஆகும்.

**6. பாடலின் தளத்தை ஏர் நடத்திப் பண்படுத்திப் போகின்றனவை எவை?**

ஒலிக்கோலம், சொற்புலம், சொற்றொடர் நிலை.

**7. பண்டைய கவிஞர்களுக்கு இயல்பாக இருந்த உணர்வு எது?**

கவிப்பொருளை அமைக்கின்ற விதத்தில் உணர்ச்சிகளைப் பாய்ச்சும் விதத்தில் தீங்கவிகளைச் செவியாரப் பருகச்செய்து கற்போர் இதயம் கனியும் வண்ணம் படைக்கும் அழவியல் உணர்வு, பண்டைக் கவிஞர்களுக்கு இயல்பாக இருந்தது.

**8. இலக்கியத்தனம் என்பது யாது?**

- இலக்கியம் என்ற மொழிசார்கலை, மொழியின் தனித்துவமான பண்புகளை இயன்ற மட்டும் தனக்குரியதாக்கிக் கொள்கிறது.
- இலக்கியத்திற்கு ஒரு சிறப்புத்தன்மையைத் தந்துவிடுகிறது. இத்தகைய தன்மைதான் கவித்தனம் அல்லது இலக்கியத்தனம் என்று பேசப்படுகிறது.

**9. மொழியின் வழக்குகளைக் கலையியல் வழக்குகளாக மாற்றுபவை எவை?**

உவமம், உருவகம், எச்சம், குறிப்பு, உள்ளுறை, இறைச்சி.

**10. 'லட்சியம்' பொருள்களோடு இரண்டற இணைத்துவிடுவது எது?**

அகன் ஐந்திணைகளைப் பேசுகிற தொல்காப்பியம் புணர்தல், பிரிதல் முதலான அகன் ஐந்திணைகளை இன்பம், பொருள், அறம் ஆகிய அறவியல் 'லட்சியப்' பொருள்களோடு இரண்டற இணைத்துவிடுகிறது.

**11. எந்த தொன்மையான மொழியும் எவற்றிலிருந்து தொடங்குகிறது?**

எந்த தொன்மையான மொழியும் சமிக்கையிலிருந்தும் இசையிலிருந்தும்தான் தொடங்குகிறது.

**12. ஒலிப்பின்னல் என்பது யாது?**

- மொழிசார்ந்த கவிதையும் இசையோடும் இசைக்கருவியோடும்தான் பிறக்கிறது.
- ஓசையும் பொருளும் இணைந்து கலைவடிவம் கொள்கின்றன.
- இதனையே அந்தப் பனுவலின் பாடலின் ஒலிப்பின்னல் என்கிறோம்.

**13. சொல்லில் புதைந்து கிடப்பன யாவை?**

- சொல்லில்தான் உணர்வும் பொருளும் பொதிந்து கிடக்கின்றன.
- கலையும் பண்பாடும் வரலாறும் அரசியலும் பொதிந்து கிடக்கின்றன.

**14. தமிழ் இலக்கியங்களில் காணப்படும் சொல்வளத்திற்கான சான்றுகளைத் தருக.**

- முல்லைக் கலியில், காளைகளில் பல இனங்களைக் காட்டுகிற சொற்கள் நிரம்பிக் கிடக்கின்றன.
- கி. ராஜநாராயணன் 'கிடை' என்னும் குறுநாவலில் ஆடுகளில் அடையாளங்களைப் பல பெயர்கள் சொல்லி அழைக்கிறார்.

**15. சொல்வளம் என்பது யாது?**

- சொல்வளம் என்பது தனிச்சொற்களாய் நிறைந்து அமைவதையும் குறிக்கும்.
- ஒன்றிற்கு மேற்பட்ட சொற்கள் கவவுக்கை நெகிழாமல் முயங்கிக் கிடப்பதையும் குறிக்கும்.

**16. தொடரியில் வடிவம் செய்யும் பணிகள் யாவை?**

ஒலிக்கோலமும் சொற்புலமும் சொற்றொடர் நிலையும் பாடலின் தளத்தை ஏர் நடத்திப் பண்படுத்திப் போகின்றன என்றால், பாத்திகட்டி வரப்புயர்த்தும் பணிகளைத் தொடரியல் வடிவம் செய்கின்றது.

**17. தி. சு. நடராசன் தமிழ்ப் போராசிரியராகப் பணியாற்றிய பல்கலைக்கழகங்களைக் கூறுக.**

- மதுலை காமராசர் பல்கலைக்கழகம்.
- போலந்து நாட்டின் வார்ஸா பல்கலைக்கழகம்.
- திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்.

**18. தி.சு. நடராசன் இயற்றிய நூல்கள் யாவை?**

கவிதையெனும் மொழி, திறனாய்வுக்கலை, தமிழ் அழகியல், தமிழின் பண்பாட்டு வெளிகள்.

## சிறுவினா

**1. தி.சு. நடராசன் - குறிப்பு வரைக.**

| | | |
|---|---|---|
| பெயர் | : | தி.சு. நடராசன் |
| சிறப்பு | : | திறனாய்வுக்கலையைத் தமிழுக்கு அறிமுகப்படுத்தியவர். |
| பதவி | : | மதுரை காமராசர் பல்கலைக்கழகம், போலந்து நாட்டின் வார்சா பல்கலைக்கழகம், திருநேல்வேலி மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரிந்தார். |
| படைப்புகள் | : | கவிதையெனும் மொழி, தமிழ் அழகியல், தமிழ் பண்பாட்டு வெளிகள், திறனாய்வுக்கலை. |

**2. சங்கப்பாடல்கள் பலவற்றுள் அமைந்துள்ள மறுதலைத் தொடரியல் போக்குக்குச் சான்று தந்து விளக்குக.**

தமிழ் மொழியில் உரைநடை வழக்கு, பேச்சு வழக்கு உள்ளிட்ட இயல்பு வழக்கில் தொடரமைப்பு என்பது எழுவாய் + செயப்படுபொருள் அல்லது பிறவற்றுடன் கூடிய அமைப்பு + பயனிலை என்று வருவதே மரபு. ஆனால் சங்கப்பாடல்கள் பலவற்றில் இந்நிலை மாறி வருகிறது. இதனைக் கவிதை மறுதலைத் தொடர் என்பர்.

சிறப்பாக முடியும் பாடல்களின் இறுதியில்தான் இந்தத் தொடரியல் பிறழ்வுநிலை பெரிதும் காணப்படுகிறது. எடுத்துக்காட்டாகப் பேரெயின் முறுவலார், நம்பி நெடுஞ்செழியனுடைய சாவுச் சடங்கில் முரண்பாடான கருத்து உருவாகியுள்ளதை

**இடுக வொன்றோ, சுடுகவொன்றோ;**
**படுவழிப் படுக, இப்புகழ் வெய்யோன் தலையே! (புறம் : 239)**

என்ற இப்பாடலில் இடம் பெற்றுள்ள இறுதி அடி ஓர் எளிமையான தொடரியல் பிறழ்வோடு அமைந்திருக்கிறது.

‘தொடியடைய தோள் மணந்தனன்’ எனத் தொடங்கும் இப்பாடலில் தொடர்ந்து வரும் 20 அடிகளில் தொடர்கள் வரிசையாகவும் நேர்படவும் செல்வதைக் காணலாம். ஒவ்வோர் அடியிலும் தனித்தனியே வினைமுற்றுகளோடு தன்னிறைவோடு 18 பண்புகளை வரிசைப்படுத்தித் தொகுத்துக் கூறும் புலவர் இறுதியில் நெடுஞ்செழியனுடைய உடலைப் புதைத்தால் புதை ; சுட்டால் சுடு என்று அலுத்துக் கொள்கிறார். இது சங்கப் பாடலின் மறுதலைத் தொடரியல் போக்குக்குத் தகுந்த சான்றாகும்.

## கற்பவை கற்றபின்

பக்கம்: 7

1. **கவிஞர் பாரதிதாசனின் அழகின்சிரிப்பு - குன்றம் - ஒளியும் குன்றும் பாடலில் இடம்பெற்றுள்ள நடைச்சிறப்பினைத் தொகுத்து உரையாக வழங்குக.**

**ஒளியும் குன்றும்**
**அருவிகள் வைரத்தொங்கல்**
**அடர்கொடிப் பச்சைப்பட்டே**
**குருவிகள் தங்கக் கட்டி**
**குளிர்மலர் மணியின் குப்பை**
**எருதின்மேல் பாயும் வேங்கை**
**நிலவுமேல் எழுந்த மின்னல்**
**சருகெலாம் ஒளிசேர் தங்கத்**
**தகடுகள் பாரடா நீ** **- பாரதிதாசன்**

இயற்கை வருணனையைப் பாரதிதாசன் செம்மைப் படுத்துவதில் வல்லவர்.

இப்பாடலில், வானுயிர்ந்த மலையின் அழகை தனக்கே உரித்தான நடையில் உருவகப்படுத்துகிறார்.

- மலையினின்று விழும் வெண்மையான அருவிகள் மலையாகிய பெண்ணின் காதில் அணிந்திருக்கும் வைரத்தாலான தொங்கலாக உள்ளது.
- மலையில் அடர்த்தியாகப் படர்ந்திருக்கும் பசுமையான கொடிகள் அப்பெண் உடுத்தியிருக்கும் பச்சைப் பட்டாடையாகக் காணப்படுகிறது.
- மலையில் காணப்படும் குருவிகள் சூரிய ஒளியின் காரணமாகத் தங்கக் கட்டிகளாகக் காணப்படுன்றன.
- பூத்திருக்கும் பூக்கள் நவமணிகள் ஆகக் காட்சியளிக்கின்றன.
- எருதின் மேல் பாயும் வேங்கைக் காட்சிகள், முன்வைக்கப்படுகிறது.
- நிலவின்மேல் ஓடுகின்ற மின்னலின் வரிகள் விழுந்து கிடக்கும் சருகுகள் ஒளியின் பிரகாசத்தால் தங்கத்தகடுகளாகக் காட்சியளிக்கின்றன.

2. **தமிழின் சொல்வளத்தை வெளிப்படுத்தும்படியாக யானை / மலர் குறித்த பல சொற்களை அகராதியில் கண்டு பட்டியலிடுக.**

| | |
|---|---|
| **யானை** | வேழம், களிறு, களபம், மாதங்கம், கைம்மா, உம்பர், கரி, தும்பி, ஆனை, களபம், கயமுனி, கைம்மலை, குஞ்சரம், வல்விலங்கு, துங்கல், வாரணம், கடகம், துடியடி, கடகம். |
| **மலர்** | அரும்பு, போது, நளை, முகிழ், புஷ்பம், நறுவி, மெகெகுள், செம்மலா், பொதும்பர், அலர், மகரந்தம், பொம்மல், வீதி. |

✹✹★★★✹✹

இயல் 1
செய்யுள்

# தன்னேர் இலா தமிழ்

**(தண்டியலங்கார உரை மேற்கோள் பாடல்)**

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **“மின்னேர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது தன்னேர் இலாத தமிழ்!” இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடைநயம்**

அ) அடிமோனை, அடி எதுகை
ஆ) சீர் மோனை, சீர் எதுகை
இ) அடி எதுகை, சீர் மோனை
ஈ) சீர் எதுகை, அடியோனை
**[விடை: இ]**

### சிறுவினா

1. **‘ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும்’ - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.**

**இடம் :**

இப்பாடலின் அடி தண்டியலங்காரம் என்னும் அணி இலக்கண நூலின் பொருளணியியலில் இடம் பெற்றுள்ள உரை மேற்கோள் பாடலாகும். இதன் ஆசிரியர் தண்டி ஆவார்.

**பொருள் :**

மக்களால் போற்றப்பட்டு, உயர்ந்த மலைகளுக்கு இடையே பொதிகையில் பிறந்து, சான்றோரால் தொழப்பட்டு, மக்களின் அறியாமை என்னும் இருளைப்போக்கும் தமிழே உனக்கு நிகர் இல்லை என்கிறார்.

கடலால் சூழப்பட்ட இந்நிலவுலகின் இருளைப் போக்கும் கதிரவனைப் போல அகஇருளைப் போக்கும் தமிழ்மொழிக்கு நிகர் எம்மொழியும் இல்லை என்பதாகும்.

### இலக்கணக் குறிப்பு

| | | |
|---|---|---|
| **வெங்கதிர்** | - | பண்புத்தொகை |
| **உயர்ந்தோர்** | - | வினையாலணையும் பெயர் |
| **இலாத** | - | இடைக்குறை |

### உறுப்பிலக்கணம்

| | |
|---|---|
| **உயர்ந்தோர் = உயர் + த்(ந்) + த் + ஓர்** | **விளங்கி = விளங்கு + இ** |
| உயர் - பகுதி | விளங்கு - பகுதி |
| த் - சந்தி (‘ந்’ ஆனது விகாரம்) | இ - வினையெச்ச விகுதி |
| த் - இறந்தகால இடைநிலை | |
| ஓர் - பலர்பால் வினைமுற்று விகுதி | |
| ஆர் என்பதன் ஈற்றயலெழுத்தான ‘ஆ’ ‘ஓ’ ஆகத் திரியும் (நன் 353) | |

| | | |
|---|---|---|
| **வந்து** | = | **வா(வ) + த்(ந்) + த் + உ** |
| வா (வ) | - | பகுதி ('வ' எனக் குறுகியது விகாரம்) |
| த் | - | சந்தி, ('ந்' ஆனது விகாரம்) |
| த் | - | இறந்தகால இடைநிலை |
| உ | - | வினையெச்ச விகுதி |

## புணர்ச்சி விதி

1. **ஆங்கவற்றுள் = ஆங்கு + அவற்றுள்**
   - 'உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும்' என்ற விதிப்படி, ஆங்க் + அவற்றுள் என்றானது.
   - 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்ற விதிப்படி, (க் + அ = க) ஆங்கவற்றுள் என்று புணர்ந்தது.

2. **தனியாழி = தனி + ஆழி**
   - 'இ ஈ ஐ வழி யவ்வும்' என்ற விதிப்படி, தனி + ய் + ஆழி என்றானது,
   - "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்ற விதிப்படி (ய் + ஆ = யா) 'தனியாழி' என்று புணர்ந்தது.

3. **வெங்கதிர் = வெம்மை + கதிர்**
   - 'ஈறுபோதல்' என்ற விதிப்படி 'மை' கெட்டு வெம் + கதிர் என்றானது.
   - 'முன்னின்ற மெய் திரிதல்' என்ற விதிப்படி ('ம்' 'ங்' – ஆகத் திரிந்து) 'வெங்கதிர்' என்று புணர்ந்தது.

# கூடுதல் வினாக்கள்

## பலவுள் தெரிக

1. **அணியிலக்கணத்தை மட்டும் கூறும் இலக்கண நூல்**

   அ) முத்துவீரியம் ஆ) வீரசோழியம்
   இ) மாறனலங்காரம் ஈ) இலக்கண விளக்கம் **[விடை: இ]**

2. **கீழ்க்காண்பவற்றுள் 'வினையாலணையும் பெயர்' எது?**

   அ) உயர்ந்தோர் ஆ) வந்தான் இ) நடப்பான் ஈ) உயர்ந்து **[விடை: அ]**

3. **'ஈறுபோதல்', 'முன்னின்ற மெய்திரிதல்' எச்சொல்லுக்குரிய புணர்ச்சி விதி?**

   அ) கருங்குயில் ஆ) வெங்கதிர் இ) நெடுந்தேர் ஈ) முதுமரம் **[விடை: ஆ]**

4. **'விளங்கி' – இச்சொல்லின் சரியான பகுபதஉறுப்பிலக்கண பிரிப்பு**

   அ) விள + ங் + இ ஆ) விளங்கு + க் + இ
   இ) வி + ளங்கு + இ ஈ) விளங்கு + இ **[விடை: ஈ]**

5. **கருத்து 1 : மக்களின் அறியாமையை அகற்றுவது தமிழ்மொழியாகும்.**
   **கருத்து 2 : புற இருளைப் போக்க கதிரவன் உதவும்.**

   அ) இரண்டு கருத்தும் சரி ஆ) கருத்து 1 சரி 2 தவறு
   இ) கருத்து 1 தவறு 2 சரி ஈ) இரண்டு கருத்தும் தவறு **[விடை: அ]**

6. **கருத்து 1 : 'தொன்னூல் விளக்கம்' அணியிலக்கணத்தை மட்டுமே கூறும் நூல்.**
   **கருத்து 2 : 'குவலயானந்தம்' என்னும் நூல் முழுமையான இலக்கண நூல்.**

அ) இரண்டு கருத்தும் சரி
ஆ) இரண்டு கருத்தும் தவறு
இ) கருத்து 1 தவறு, 2 சரி
ஈ) இவற்றில் எதுவுமில்லை [விடை: ஆ]

7. **சரியானதைத் தேர்க.**

அ) வீரசோழியம் - நாவல்
ஆ) முத்து வீரியம் - சிறுகதை
இ) குவலயானந்தம் - அணியிலக்கணம்
ஈ) மாறனலங்காரம் - பொருளிலக்கணம் [விடை : இ]

8. **சரியானதைத் தேர்க.**

அ) வந்து - பெயரெச்சம்
ஆ) உயர்ந்தோர் - வினையாலணையும் பெயர்
இ) இலாத - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
ஈ) வெங்கதிர் - வினைத்தொகை [விடை: ஆ]

9. **பொருந்தாததைக் தேர்க.**

அ) தமிழ்மொழி - பொதிகை மலை
ஆ) தொல்காப்பியம் - இலக்கிய நூல்
இ) தண்டியலங்காரம் - தண்டி
ஈ) காவியதர்சம் - வடமொழி இலக்கணம் [விடை: ஆ]

10. **பொருத்துக.**

அ) வெங்கதிர் - 1. இடைக்குறை
ஆ) இலாத - 2. வினையெச்சம்
இ) வந்து - 3. வினையாலணையும் பெயர்
ஈ) உயர்ந்தோர் - 4. பண்புத்தொகை

அ) 4, 2, 3, 1 ஆ) 4, 1, 3, 2 இ) 4, 1, 2, 3 ஈ) 2, 3, 1, 4 [விடை: இ]

11. **தமிழ் தோன்றிய மலை**

அ) குடகு ஆ) பொதிகை இ) இமயமலை ஈ) விந்தியமலை [விடை: ஆ]

12. **தன்னேர் இலாத தமிழ் பாடப்பகுதியல் இடம்பெற்றுள்ள பாடல்**

அ) தண்டியலங்கார உரை மேற்கோள் பாடல்
ஆ) இறையனார்களவியல் உரை மேற்கோள் பாடல்
இ) நம்பியகப்பொருள் உரை மேற்கோள் பாடல்
ஈ) புறப்பொருள் வெண்பாமாலை உரை மேற்கோள் பாடல் [விடை: அ]

13. **இருளைப் போக்கும் இரண்டு**

அ) கதிரவன், நிலவு
ஆ) கதிரவன், தமிழ்
இ) அறிவு, தமிழ்
ஈ) அறிவு, ஞானம் [விடை: ஆ]

14. **மின்னலைப் போன்று ஒளிர்வது**

அ) கதிரவன் ஆ) தமிழ் இ) தமிழ் ஈ) வானம் [விடை: அ]

15. **அணியிலக்கணத்தை மட்டுமே கூறும் இலக்கண நூலைக் கண்டறிக.**

அ) வீரசோழியம்
ஆ) இலக்கணவிளக்கம்
இ) முத்து வீரியம்
ஈ) குவலயானந்தம் [விடை: ஈ]

16. **தண்டியலங்காரம் ................ இலக்கணத்தைக் கூறும் நூல்.**
அ) எழுத்து ஆ) சொல் இ) பொருள் ஈ) அணி **[விடை: ஈ]**

17. **'ஓங்கலிடை வந்து' என்று தொடங்கும் பாடல் தண்டியலங்காரத்தின் ................ பகுதியில் இடம்பெற்றுள்ளது.**
அ) பொருளணியியல் ஆ) பொதுவியல் இ) சொல்லணியியல் ஈ) ஒழிபியல் **[விடை: அ]**

18. **காவியதர்சம் என்பது**
அ) வடமொழி இலக்கண நூல் ஆ) புராண நூல்
இ) வரலாற்று நூல் ஈ) மலையாள இலக்கிய நூல் **[விடை: அ]**

19. **காவியதர்சம் என்னும் வடமொழி இலக்கண நூலைத் தழுவி எழுதப்பட்ட நூல்**
அ) தண்டியலங்காரம் ஆ) மாறனலங்காரம்
இ) வீரசோழியம் ஈ) முத்துவீரியம் **[விடை: அ]**

20. **தண்டியலங்காரத்தின் ஆசிரியர்**
அ) தண்டி ஆ) ஐயரினாதர் இ) சமணமுனிவர் ஈ) பவணந்தி **[விடை: அ]**

21. **தண்டி ................ ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர்.**
அ) கி.பி. 11 ஆ) கி.பி. 12 இ) கி.பி. 13 ஈ) கி.பி. 14 **[விடை: ஆ]**

22. **தண்டியலங்காரம் ................ பெரும் பிரிவுகளை உடையது.**
அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்கு ஈ) ஐந்து **[விடை: ஆ]**

## குறுவினா

1. **தண்டியலங்காரம் – நூல், நூலாசிரியர் சிறுகுறிப்பு தருக.**

அணி இலக்கணத்தைக் கூறும் சிறப்பான நூல்களில் ஒன்று தண்டியலங்காரமாகும். 'காவியதர்சம்' என்னும் வடமொழி இலக்கண நூலைத் தழுவி எழுதப்பட்ட நூலாகும். இந்நூலை எழுதியவர் தண்டி ஆவார். இவரது காலம் கி.பி.12ஆம் நூற்றாண்டு. தண்டியலங்காரம் பொதுவியல், பொருளணியியல், சொல்லணியியல் என மூன்று பெரும் பிரிவுகளை உடையது.

| | | |
|---|---|---|
| ஆசிரியர் | : | தண்டி |
| காலம் | : | 12ஆம் நூற்றாண்டு |
| தழுவல் நூல் | : | காவியதர்சம் என்னும் வடமொழி இலக்கண நூலை தழுவி எழுதப்பட்டது. |
| மூன்று பிரிவுகள் | : | பொதுவியல், பொருளணியியல், சொல்லணியியல். |

2. **அணியிலக்கணத்தை மட்டும் கூறும் இலக்கண நூல்கள் யாவை?**

தண்டியலங்காரம், மாறனலங்காரம், குவலயானந்தம்.

3. **அணியிலக்கணத்தோடு பிற இலக்கணத்தையும் கூறும் நூல்கள் யாவை?**

அணி இலக்கணத்தோடு பிற இலக்கணத்தையும் கூறும் நூல் தொல்காப்பியம், வீரசோழியம், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்து வீரியம் ஆகும்.

4. **தண்டியலங்காரத்தின் மூன்று பெரும் பிரிவுகள் யாவை?**

பொதுவியல், மாறனலங்காரம், சொல்லணியியல்.

5. **ஒப்புவமை இல்லாததுமாக இருப்பது தமிழே – விளக்குக.**

பொதிகை மலையில் தோன்றி, சான்றோரால் தொழப்பட்டு, மக்களின் அறியாமை என்னும் அக இருளைப் போக்குவதோடு ஒப்புவமை இல்லாததுமாக இருப்பது தமிழே ஆகும்.

6. **புற இருளைப் போக்குவது எது?**

மக்களால் போற்றப்பட்டு, உயர்ந்த மலைகளுக்கு இடையே தோன்றி, கடலால் சூழப்பட்ட உலகத்தின் புற இருளை போக்குவது கதிரவனாகும்.

## சிறுவினா

1. **தன்னேர் இலாத தமிழின் சிறப்புக் குறித்துத் தண்டியலங்கார உரை மேற்கோள் பாடல் உணர்த்தும் செய்தி யாது ?**

- இந்நில உலகில் வாழும் மக்கள் அனைவராலும் போற்றப்பட்டு உயர்ந்த மலைகளுக்கு இடையே தோன்றி, எப்போதும் ஒலித்துக் கொண்டிருக்கும் கடலால் சூழப்பட்ட உலகத்தின் புற இருளை போக்குவது கதிரவன்.
- குளிர்ச்சிப் பொருந்திய பொதிய மலையில் தோன்றி, சான்றோர்களால் தொழப்பட்டு, மக்களின் அறியாமை என்னும் அக இருளைப் போக்குவதும் எதனோடும் ஒப்பிட்டுக் கூற முடியாததுமானது தமிழ்மொழி.
- புற இருளைப் போக்கும் கதிரவனைப்போல அக இருளைப் போக்கும் தமிழ்மொழிக்கு நிகர் எம்மொழியும் இல்லை என்று தண்டியலங்கார உணர மேற்கோள் பாடல் உணர்த்துகின்றது.

2. **பொருள் வேற்றுமையணியைச் சான்று தந்து விளக்குக.**

**அணி இலக்கணம் :**

செய்யுளில் கவிஞர் இருவேறு பொருள்களுக்கிடையே ஒற்றுமையை முதலில் கூறியப்பின் ஒன்றிலிருந்து ஒன்றை வேறுபடுத்திக் காட்டுவது பொருள் வேற்றுமை அணி எனப்படும்.

இது வேற்றுமை அணியின் ஒரு பிரிவாகும்.

**சான்று :**

**ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழ விளங்கி**
**ஏங்கொலிநீர் ஞாலத்(து) இருளகற்றும் - ஆங்கவற்றுள்**
**மின்னேர் தனியாழி வெங்கதிரொன்(று) ஏனையது**
**தன்னேர் இலாத தமிழ்.**

**அணிப்பொருத்தம் :**

கதிரவனும், தமிழ்மொழியும் மலையில் தோன்றுகின்றன என ஒப்புமையைக்கூறி, அவற்றுள் தமிழ்மொழிக்கு நிகராக வேறெந்த மொழியும் இவ்வுலகில் இல்லை என்று வேறுபடுத்திக் காட்டியதால் இப்பாடல் பொருள் வேற்றுமையணி ஆகும்

**கதிரவன் புற இருளை அகற்றும்;**
**தமிழ்மொழி அக இருளை அகற்றும்.**

**விளக்கம் :**

**கதிரவன்**

எப்போதும் ஒலித்துக் கொண்டிருக்கும் கடலால் சூழப்பட்ட உலகத்தின் புற இருளை அகற்றும் கதிரவன் உயர்ந்த மலைகளுக்கு இடையே தோன்றும்.

**தமிழ்:**

குளிர்ச்சிப் பொருந்திய பொதிய மலையில் தோன்றிய தமிழ்மொழி மக்களின் அறியாமை என்னும் அக இருளை அகற்றும் அத்தமிழ்மொழிக்கு நிகராக வேறெந்த மொழியும் இல்லை.

## கற்பவை கற்றபின்

பக்கம்: 9

1. **வேற்றுமை அணி பயின்று வரும் இரு பாடல்களை விளக்கத்துடன் எழுதி வருக.**

பாடல் : 1

**அங்கண் விசும்பின் அகனிலாப் பாறிக்கும்**
**திங்களும் சான்றோரும் ஒப்பர்மன் – திங்கள்**
**மறுவாற்றும் சான்றோர் அஃதாற்றார் தெருமருத்து**
**தெய்வர் ஒரு மாசுறின்.** – *நாலடியார்*

இப்பாடலில், திங்களுக்கும் சான்றோருக்கும் முதலில் ஒப்புமைக்கூறி பின்னர் வேறுபடுத்தப்பட்டுள்ளது.

**அணி இலக்கணம் :**

இருபொருட்களுக்கு இடையே ஒப்புமையைக் கூறி அவற்றுள் ஒன்றிலிருந்து ஒன்று உயர்ந்ததாகக் கூறுவது வேற்றுமை அணி ஆகும்.

**விளக்கம்:**

திங்கள் தேயும், சான்றோன் தேயார் (மனநிலை மாறார்) என்பதேயாகும்.

பாடல் : 2

**அணி இலக்கணம் :**

இருபொருட்களுக்கு இடையே ஒப்புமையைக் கூறி அவற்றுள் ஒன்றிலிருந்து ஒன்று உயர்ந்ததாகக் கூறுவது வேற்றுமை அணி ஆகும்.

**சான்று :**

தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு – குறட்பா

**பொருத்தம்:**

தீயினால் உண்டான புண் உள் ஆறிவிடும்.
நாவினால் உண்டான புண் உள்ளத்தில் ஆறாத வடுவாக இருக்கும்.

2. **'தன்னேர் இலாத தமிழ்' என்னும் தலைப்பில் சொற்போரில் பங்கேற்பதற்கான ஐந்து நிமிட உரை உருவாக்குக.**

அனைவருக்கும் வணக்கம்!

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ் பழமையும், பெருமையும் கொண்டது. இலக்கண, இலக்கியங்கள், சிறுகாப்பியம், பெருங்காப்பியம், தொகை, பாட்டு, ஆற்றுபடை என எண்ணிலடங்கா நூல்கள் உருவாகி தமிழின் சிறப்பை உலகே தொழும் வகையில் அமைந்துள்ளது.

முதல் இடை கடைச்சங்கம் கொண்டது. தன்னிகரில்லா தன்மொழியாக விளங்கியது. தனித்து இயங்கும் ஆற்றல் கொண்டது, பிறமொழி உதவி இல்லாமல், இடர்ப்பாடுகள் இல்லாமல் இயங்கும் ஆற்றல் கொண்டது.

திருந்திய பண்பும் சீர்த்த நாகரிகமும் கொண்ட என் தமிழின் உதவியில்லாமல் தெலுங்கு, கன்னடம், மலையாளம் இயங்க முடியாது. இயல், இசை, நாடகம் என்னும் மூன்று பெரும் பிரிவுகளைக் கொண்டு தனக்கு நிகர் இல்லாத மொழியாய் விளங்குகிறது.

நன்றி! வணக்கம்!

இயல் 1
துணைப்பாடம்

# தம்பி நெல்லையப்பருக்கு

*- பாரதியார்*

## பாடநூல் வினாக்கள்

### நெடுவினா

**1. பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்து கொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க.**

**மொழிப்பற்று :**

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல இனிதான மொழி எதுவுமில்லை என்று கூறிய பாரதி, சு. நெல்லையப்பருக்கு எழுதிய கடிதத்திலும் அதனை உறுதிப்படுத்துகின்றார். நெல்லையப்பரிடம் அவர் கூறும் போது, 'நீ பிறமொழிகளை அறிந்திருந்தாலும், தமிழை வளர்ப்பதை கடமையாகக் கொள்ள வேண்டும் என்று கூறுகின்றார். புதிய புதிய செய்திகளும் புதிய புதிய உண்மைகளும், புதிய புதிய இன்பமும் தமிழ்மொழியில் ஏற்றம் பெற வேண்டும்.

தமிழ்நாட்டில் வீதிகள் தோறும் தமிழ்ப்பள்ளிக்கூடங்கள் பெருக வேண்டும். அந்தப் பள்ளிகளில் எல்லாம் புதிய புதிய கலைகள் பயிற்சி பெற்று வளர வேண்டும். தாய்மொழியிலே கற்பதால் தமிழ் உணர்வு அதிகமாகும், தாய்நாட்டின் மீது பற்று ஏற்படும். வடநாட்டு மொழிகள் எல்லாம் அடைந்துள்ள வளர்ச்சியைப் பார்த்த பின்பாவது நாம் நம் தாய்மொழியாம் தமிழ்மொழியின் மீது பற்றுக்கொள்ள முயல வேண்டும். புதிய புதிய சிந்தனைகள் தமிழ்மொழியில் தோன்றல் வேண்டும் என்கிறார்.

**சமூகப்பற்று :**

சமூகத்தின் அவலமாக இருக்கின்ற ஆண் பெண் வேறுபாடு முற்றிலுமாக அழிய வேண்டும். ஆண் உயர்ந்தவன் பெண் அடிமை என்ற நிலை சமூக அவலமாகும். அந்நிலை மாறவே ஆணும் பெண்ணும் ஒருயிரின் இரண்டு தலைகள்; அவற்றில் ஒன்றிலொன்று தாழ்வில்லை என்கிறார். பெண்ணைத் தாழ்த்தினால் சமூகமே சாபக்கேட்டிற்குள்ளாகும் என்பதை உணர்த்த பெண்ணைத் தாழ்த்தினவன், தன் கண்ணைக் குத்தியவனுக்குச் சமம் என்று ஆவேசத்துடன் கூறுகின்றார். பெண்ணை வீட்டிற்குள் அடைத்தவன் தன் கண்ணை இழந்த குருடன் போலப் பரிதவிப்பான் என்றும் கூறி, ஆணும் பெண்ணும் சமம் என்ற சமூக நீதியை வலியுறுத்துகின்றார்.

சமூகம் வளர்ச்சி அடைய தொழில் பெருகவேண்டும், வியாபாரம் சிறக்க வேண்டும், தொழிற்சாலைகள் வளர வேண்டும் என்கிறார். சமூக மாற்றம் காண சங்கீதம், சிற்பம், இயந்திரம், பூமி, வானம், இயற்கை சார்ந்த நூல்கள் ஆயிரம் ஆயிரமாகத் தாய்மொழியில் உருவாகிட வேண்டும். அதனைக் கற்று நம் தமிழ்ச்சமூகம் மாற்றம் பெற அனைவரும் எண்ணிட வேண்டும். அதற்குரிய சக்தியை அனைவரும் பெற்றிடவும் வேண்டுமென்று பாரதியார் சு. நெல்லையப்பருக்கு எழுதிய கடிதம் மூலம் தன் உள்ளக் கருத்தை வெளிப்படுத்துகின்றார்.

2. "சொல்லோவியங்கள்" (கவிதை) என்னும் நூல் உங்கள் பள்ளி ஆசிரியரால் எழுதப்பட்டு உங்கள் பள்ளியில் வெளியிடப்படுகிறது. அவ்வெளியீட்டு விழாவிற்கான நிகழ்ச்சி நிரலை உருவாக்கி, நன்றியுரை ஒன்றை எழுதுக.

## சொல்லோவியங்கள்

**கவிதை நூல் வெளியீட்டு விழா**

**இடம்** : அரசு மேனிலைப்பள்ளி, விழுப்புரம்.

**நாள்** : 19.06.2019, புதன்கிழமை.

**நேரம்** : பிற்பகல் 3 மணி

| | |
|---|---|
| தமிழ்த்தாய் வாழ்த்து | : மாணவர்கள் |
| வரவேற்புரை | : திரு. **ச. செந்தில்குமார்** (தலைமையாசிரியர், அரசு மேனிலைப்பள்ளி, விழுப்புரம்) |
| நூல் அறிமுக உரை | : **தி.ப. பிறைசூடன்** அவர்கள் (எழுத்தாளர்) |
| நூல் வெளியிட்டு வாழ்த்துரை | : திருமிகு. **வ. சரவணன்** அவர்கள், (மாவட்டக் கல்வி அலுவலர், விழுப்புரம்) |
| முதல் பிரதியைப் பெற்றுக்கொள்பவர் | : திருமிகு. **தா. அண்ணாமலை** அவர்கள் (தொழிலதிபர் மற்றும் சமூக ஆர்வலர்) |
| ஏற்புரை | : திரு. கவிஞர். **த. தமிழரசன்** அவர்கள் (முதுகலைத் தமிழாசிரியர், அரசு மேனிலைப்பள்ளி, விழுப்புரம்.) |
| நன்றியுரை | : திரு. **இரா. கேசவன்** (உதவித் தலைமையாசிரியர், அரசு மேனிலைப்பள்ளி, விழுப்புரம்) |

தேசிய கீதம்

### நன்றியுரை

**"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல**
**தன்றே மறப்பது நன்று"**

என்ற வள்ளுவனின் வாய்மொழிக்கு ஏற்ப எனக்கு வாய்ப்பளித்த நல்ல உள்ளங்களுக்கு மாலை வணக்கம்.

எப்பொழுதெல்லாம் நம் பேனா தலை குனிகிறதோ அப்பொழுதெல்லாம் நீ வாழ்வில் தலை நிமிர்வாய் என்றபடி தன் பேனாவைத் தலைகுனிய வைத்து இந்த அவையில் தலை நிமிர்ந்து இருக்கும் தமிழாசிரியருக்கு நன்றி. இவர் சொல்லோவியங்கள் என்ற கவிதை நூலை அழகுபட செதுக்கியுள்ளார்.

இவர் செலுத்தியதை வர்ணம் தீட்டி குடமுழுக்கு விழா செய்து நம் கைகளில் தவழ்ந்து கொண்டிருக்கும் நூலை வெளியிட்டு வாழ்த்துறை வழங்கிய மாவட்டக் கல்வி அலுவலர் அவர்களுக்கு நன்றி. இவ்வுலகில் பிறந்து இறந்து எந்தவித அறிமுகமும் இல்லாமல் செல்கின்றனர். அதற்கு மாறாக பிறையைத் தலையிலே சூடிய சிவனைப் போல் இவ்விழாவிற்கு வருகைத்தந்து நூல் அறிமுகவுரை தந்த ஐயா பிறைசூடனுக்கு நன்றி. எந்த ஒரு செயலும் இன்றே தொடங்க இறையருள் தேவை அதோடு செல்வமும் தேவை என்பதற்கு ஏற்ப செல்வத்தின் நாயகனாம் தொழிலதிபர் அண்ணாமலை அவர்களின் கரங்களால் முதல் பிரதியைப் பெற்று துவங்கி வைத்தமைக்கு நன்றி, இவ்விழா நடைபெற முழு காரணமாக விளங்கிய தலைமை ஆசிரியர், ஆசிரிய நண்பர்கள், மாணவர்கள், ஏனைய உறவுகளுக்கு விழாக்குழு மூலம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி ! வணக்கம் !

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**1. தமிழ்நாட்டில் வீதி தோறும் இருக்க வேண்டியது எது எனப் பாரதியார் விரும்புகிறார்**

அ) ஆலயம் ஆ) தொழிற்சாலை

இ) பள்ளிக்கூடம் ஈ) இவற்றில் எதுவுமில்லை **[விடை: இ]**

**2. பாரதியார் நெல்லையப்பருக்கு எழுதிய கடிதங்களைப் பதிப்பித்தவர்**

அ) இளசைமணி ஆ) ரா.அ. பத்மநாபன்

இ) கி. ராஜநாராயணன் ஈ) கவிகேசரி சாமி தீட்சிதர் **[விடை: ஆ]**

**3. கருத்து 1 : ஆணும் பெண்ணும் ஒருயிரின் இரண்டு தலைகள் என்றார் பாரதி.**
**கருத்து 2 : பரலி. சு. நெல்லையப்பர் பாரதியின் பாப்பாப்பாட்டைப் பதிப்பித்தவர்.**

அ) இரண்டு கருத்தும் தவறு ஆ) இரண்டு கருத்தும் சரி

இ) கருத்து 1 தவறு, 2 சரி ஈ) கருத்து 1 சரி, 2 தவறு **[விடை: அ]**

**4. சரியானதைத் தேர்க.**

அ) முரசுப்பாட்டு - குந்திகேசவர்
ஆ) நெல்லைத் தென்றல் - வ.உ.சிதம்பரனார்
இ) பாரதி கடிதங்கள் - ரா.அ. பத்மநாபன்
ஈ) வம்சமணி தீபிகை - சு. நெல்லையப்பர் **[விடை: இ]**

**5. சரியானதைத் தேர்க.**

அ) கவிகேசரி சாமி தீட்சிதர் - பாரதி கடிதங்கள்
ஆ) இளசைமணி - சூரியோதயம்
இ) கண்ணன்பாட்டு - ரா.அ. பத்மநாபன்
ஈ) வ.உ. சிதம்பரனாரின் வாழ்க்கை வரலாறு - சு. நெல்லையப்பர் **[விடை: ஈ]**

**6. பொருந்தாததைத் தேர்க.**

அ) இளசை மணி - வம்சமணி தீபிகை நூலின் மறுமதிப்பு
ஆ) வம்சமணி தீபிகை - கவிகேசரி சாமி தீட்சிதர்
இ) பரலி சு. நெல்லையப்பர் - ஆசிரியர்
ஈ) பாரதி வாழ்த்து - பரலி சு. நெல்லையப்பர் **[விடை: இ]**

7. **பொருத்துக.**

அ) வம்சமணி தீபிகை - 1. சு. நெல்லையப்பர்
ஆ) பாரதி கடிதங்கள் - 2. ரா.சு. பத்மநாபன்
இ) நெல்லைத் தென்றல் - 3. கவிகேசரி சாமி தீட்சிதர்

அ) 1, 2, 3 ஆ) 3, 2, 1 இ) 2, 3, 1 ஈ) 1, 3, 2 **[விடை: ஆ]**

8. **பொருத்துக.**

அ) தமிழ் அழகியல் - 1. பரலி சு. நெல்லையப்பர்
ஆ) நிலவுப்பூ - 2. தி.சு. நடராசன்
இ) கிடை - 3. சிற்பி. பாலசுப்பிரமணியம்
ஈ) உய்யும் வழி - 4. கி. ராஜநாராயணன்

அ) 4, 3, 2, 1 ஆ) 1, 4, 2, 3 இ) 2, 4, 1, 3 ஈ) 2, 3, 4, 1 **[விடை: ஈ]**

9. **பாரதி நெல்லையப்பருக்குக் கடிதம் எழுதிய இடம், நாள்**

அ) புதுச்சேரி, 19 ஜூலை 1915 ஆ) நெல்லை, 14 ஜீலை 1914
இ) கடலூர், 18 ஆகஸட் 1914 ஈ) காரைக்கால், 19 ஜீலை 1915 **[விடை: அ]**

10. **நெல்லையப்பரை யார் காத்திட வேண்டும் என்கிறார் பாரதி?**

அ) சிவன் ஆ) முருகன் இ) பராசக்தி ஈ) துர்க்கை **[விடை: இ]**

11. **நெல்லையப்பர் எதனைக் கடமையாகக் கொள்ள வேண்டும் என்று பாரதி கூறினார்?**

அ) பெற்றோரைக் காப்பதை ஆ) விடுதலைக்குப் போராடுவதை
இ) தமிழ் வளர்ப்பதை ஈ) சமூக இழிவை களைவதை **[விடை: இ]**

12. **'தம்பி-உள்ளமே உலகம்' என்று யார் யாருக்குக் கூறியது?**

அ) அறிஞர் அண்ணா, கலைஞருக்கு ஆ) பாரதி, நெல்லையப்பருக்கு
இ) மு.வ., இளைஞர்களுக்கு ஈ) திரு.வி.க., தமிழர்களுக்கு **[விடை: ஆ]**

13. **உனக்குச் சிறகுகள் தோன்றுக. பறந்து போ-என்பதில் 'உனக்கு' என்பது யாரை எதைக் குறிக்கிறது?**

அ) தமிழை ஆ) நெல்லையப்பரை
இ) குயிலை ஈ) இளைஞர்களை **[விடை: ஆ]**

14. **பெண்ணைத் தாழ்மை செய்தோன் கண்ணைக் குத்திக் கொண்டான் என்றெழுது-என்று கடிதம் எழுதியவர்**

அ) நெல்லையப்பர் ஆ) பாரதியார் இ) வாணிதாசன் ஈ) பாரதிதாசன் **[விடை: ஆ]**

15. **நெல்லையப்பரைப் பாரதி ................ என்று கூவு என்கிறார்.**

அ) வாழ்க வாழ்க ஆ) தொழில்கள் தொழில்கள்
இ) மனிதர்கள் மனிதர்கள் ஈ) வெல்க வெல்க **[விடை: ஆ]**

16. **ஒருயிரின் இரண்டு தலைகள் என்பன**

அ) ஆணும் பெண்ணும் ஆ) அறிவும் அழகும்
இ) வாழ்வும் தாழ்வும் ஈ) பிறப்பும் இறப்பும் **[விடை: அ]**

17. **தமிழ்ப் பள்ளிக் கூடங்களில் ................ எல்லாம் பயிற்சிப் பெற்று வளர வேண்டும் என்கிறார் பாரதி.**

அ) நவீன கலைகள் ஆ) விளையாட்டு
இ) பாரம்பரிய கலைகள் ஈ) அறிவியல் கல்வி **[விடை: அ]**

**18. வம்சமணி தீபிகை என்னும் நூலை எழுதியவர் ................ வெளியிட்ட ஆண்டு ................**

அ) கவிகேசரி சாமி தீட்சிதர், 1879 ஆ) முத்து சாமி தீட்சிதர், 1879

இ) இளசைமணி, 2008 ஈ) சீனி விசுவநாதன், 2004 [விடை: அ]

**19. வம்சமணி தீபிகை என்னும் நூல் யாரைப் பற்றியது?**

அ) சோழ மன்னர்களின் பரம்பரை வரலாறு

ஆ) எட்டையபுரம் மன்னர்களின் பரம்பரை வரலாறு

இ) ஆங்கில ஆட்சியாளரின் அடக்குமுறைகளைக் கூறுவது

ஈ) பாரதியின் வாழ்கதை வரலாற்றைக் கூறுவது [விடை: ஆ]

**20. வம்சமணி தீபிகை நூலின் பதிப்பைத் திருத்தி வெளியிட ஆசை கொண்டு .6.8.1919இல் ஆட்சி செய்த வெங்கடேசர எட்டப்பருக்குக் கடிதம் எழுதியவர் ................**

அ) பாரதியார் ஆ) சீனி. விசுவநாதன்

இ) இளசைமணி ஈ) கவிகேசரி சாமி தீட்சிதர் [விடை: அ]

**21. வம்சமணி தீபிகை நூலின் மூலவடிவம் மறுபதிப்பாக வெளியிட்டவர் ................ ஆண்டு ................**

அ) கவிகேசரி சாமி தீட்சிதர், 1879 ஆ) பாரதியார், 1919

இ) இளசைமணி, 2008 ஈ) சீனி. விசுவநாதன், 1921 [விடை: இ]

**22. பாரதி தனது பதினைந்து வயதில் எட்டயபுரம் அரசருக்கு எழுதிய கவிதைக் கடிதத்தில் வேண்டப்படும் செய்தி**

அ) ஆங்கில அரசை அகற்ற வேண்டி ஆ) பாரதி கல்வி கற்க உதவி வேண்டி

இ) தன் நண்பன் கல்வி கற்க உதவி வேண்டி ஈ) எட்டயப்புரத்தில் கவியரங்கம் நடத்த வசதி வேண்டி [விடை: ஆ]

**23. பாரதியின் கடைசிக் கடிதம் யாருக்கு எழுதப்பட்டது?**

அ) எட்டயபுரம் அரசருக்கு ஆ) நெல்லையப்பருக்கு

இ) குத்திகேசவருக்கு ஈ) சீனி. விசுவநாதனுக்கு [விடை: இ]

**24. சூரியோதயம், கர்மயோகி ஆகிய இதழ்களில் துணையாசிரயாக இருந்தவர்**

அ) நெல்லையப்பர் ஆ) கண்ணதாசன்

இ) பாரதிதாசன் ஈ) சீனி. விசுவநாதன் [விடை: அ]

**25. பாரதி நடத்திய இதழ்களில் துணையாசிரியாராக இருந்தவர்**

அ) நெல்லையப்பர் ஆ) கண்ணதாசன்

இ) இளசை மணி ஈ) இளசை சுந்தரம் [விடை: அ]

**26. பாரதியின் பல்வேறு பாட்டுகளை (கண்ணன் பாட்டு, பாப்பா பாட்டு உள்ளிட்டவை) பதிப்பித்தவர்**

அ) நெல்லையப்பர் ஆ) சீனி. விசுவநாதன்

இ) இளசை மணி ஈ) இளசை சுந்தரம் [விடை: அ]

**27. நெல்லைத்தென்றல், பாரதி வாழ்த்து, உய்யும் வழி ஆகிய கவிதை நூல்களை எழுதியவர்**

அ) சீனி. விசுவநாதன் ஆ) நெல்லையப்பர்

இ) இளசை மணி ஈ) இளசை சுந்தரம் [விடை: ஆ]

**28. வ. உ. சிதம்பரனாரின் வாழ்க்கை வரலாற்றை எழுதியவர்**

அ) சீனி. விசுவநாதன் ஆ) இளசை மணி

இ) இளசை சுந்தரம் ஈ) நெல்லையப்பர் [விடை: ஈ]

**29. லோகோபகரி, தேசபக்தன் ஆகிய இதழ்களில் துணையாசிரியராகவும் பிறகு ஆசிரியராகவும் பணியாற்றியவர்**


அ) சீனி. விசுவநாதன் ஆ) இளசை மணி

இ) இளசை சுந்தரம் ஈ) நெல்லையப்பர் **[விடை: ஈ]**

## கற்பவை கற்றபின்

பக்கம்: 13

**1. பாரதியின் வாழ்வினைக் காலக்கோடாக உருவாக்குக.**




**2. காலத்தை வென்ற மகாகவியான பாரதிக்குக் கற்பனைக்கடிதம் ஒன்றினை எழுதுக.**

தூத்துக்குடி,
18 ஜுலை 2019.

முறுக்கிய மீசையும், முறைத்த பார்வையும், முண்டாசுக் கட்டுக்கும் சொந்தகாரனே, செந்தமிழின் எழுச்சியே வணக்கம்.

உனது பொன் எழுத்துகளால் தமிழ் அன்னைக்கு வைரக்கிரீடம் சூட்டி மகிழ்ந்தாய்.

ஆனால், கடைசிவரை சாதாரண தலைப்பாகையினை நீ அணிந்திருந்தாய் என எத்தனைப் பேருக்குத் தெரியும்.

பாதகம் செய்பவரைக் கண்டால் நீ பயங்கொள்ளலாகாது பாப்பா, மோதி மிதித்துவிடு பாப்பா, அவர் முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா என்று பாடினாயே பாரதி. இன்றைய பாலியல் வன்கொடுமையை முன்னரே சாடினாயே பாரதி.

பிச்சை வாங்கி உண்ணும் வாழ்க்கைப் பெற்றுவிட்டபோதிலும் அச்சமில்லை அச்சமில்லை என்று சுதந்திரத்தின் மேன்மையை மக்களின் மனதில் கொடியேற்றி வைத்தவன் நீ.

தமிழில் ஓர் எழுத்துதான் ஆய்த எழுத்து. ஆனால் மற்ற 246 எழுத்துகளையும் ஆயுதமாக்கி வெள்ளையனை விரட்ட விடுதலைக் கவிகளைப் பாடி வேங்கையென விரட்டியவன் நீ.

என் உள்ளமெனும் பெருங்கோவிலில் வீற்றிருக்கிறாய். என்றொரு நாளாவது உன்னோடு ஒரே மேடையில் கவிபாட நான் விரும்புகின்றேன்.

நீவிர் சம்மதித்தால் வருகின்ற தமிழ்ப்புத்தாண்டு அன்று நாம் இருவரும் "தமிழே! உனக்குத் தலைவணங்குகிறோம்" என்ற தலைப்பில் ஒரு கவிதையை பொதிகை தொலைக்காட்சியில் பாடுவோம். உன் பதிலை உடன் எதிர்பார்க்கும் அன்பு நண்பன்.

இப்படிக்கு,

பாரதிநேசன்.

✸✸★★★✸✸

இயல் 1

இலக்கணம்

# தமிழாய் எழுதுவோம்

## இலக்கணத் தேர்ச்சி கொள்

பக்கம்: 17

1. **பிழையான தொடரைக் கண்டறிக.**

அ) காளைகளைப் பூட்டி வயலை உழுதனர்.

ஆ) மலை மீது ஏறிக் கல்வெட்டுகளைக் கண்டறிந்தனர்.

இ) காளையில் பூத்த மல்லிகை மனம் வீசியது.

ஈ) நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கின. [விடை: இ]

2. **பேச்சுத் தமிழில் அமைந்த தொடரை தேர்க!**

அ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும்.

ஆ) புத்தகக் கண்காட்சி நடைபெறுகிறது.

இ) வறட்சி எல்லா இடங்களையும் பாதித்துள்ளது.

ஈ) மயில்கள் விறலியரைப் போல் ஆடுகின்றன. [விடை: அ]

3. **முடிந்தால் தரலாம், முடித்தால் தரலாம் - இவ்விரு சொற்றொடர்கள் உணர்த்தும் பொருளை அறிந்து தொடர் அமைக்கவும் .**

**முடிந்தால் தரலாம் :**

முடிந்தால் - கொடுக்கும் எண்ணம் (இயன்றால்)

ஒரு பொருளைக் கொடுக்க முடிந்தால் கொடுக்கலாம் என்ற பொருளைத் தருகின்றது.

உன்னிடம் உள்ள பொருளைக் கொண்டு ஏழைகளுக்கு உதவ முடிந்தால் தரலாம்.

**முடித்தால் தரலாம் :**

முடித்தால் - செயல் முடிந்த பின்

தரப்பட்டுள்ள வேலையை முடித்து விட்டேன் என்றால் தரலாம் என்ற பொருளைத் தருகின்றது.

வீட்டின் திறவுகோலை வேலைகளை முடித்தால் தரலாம்.

4. **தமிழில் பிழையின்றி எழுதுவதற்கு மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள் யாவை ?**

- எழுத்தினைத் தெளிவாக உச்சரிக்கப் பழக வேண்டும். ந, ண, ன / ல, ள / ழ, ற, ர ஒலிப்பு வேறுபாடு தெரிந்து ஒலிக்க வேண்டும்.
- இவ்வெழுத்துக்கள் வரும் முறையையும் அவை ஏற்படுத்தும் பொருள் மாற்றத்தையும் அறிந்து கொள்வது இன்றியமையாத ஒன்றாகும். எழுதும் போது தொடக்கத்தில் சில காலம் வாய்விட்டோ அல்லது மனத்துக்குள் உச்சரித்தபடியோ எழுதப்பழகுவது நல்லது.
- வேகமாக எழுத முயல்வது பிழைக்கு வழிகோலும், எனவே நிதானமாக எழுதுவது நல்லது.
- கெ, கே, கொ, கோ போன்ற கொம்புடைய குறில் நெடில் வேறுபாட்டினைப் புரிந்து எழுத வேண்டும்.

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. வேற்றுமைப் புணர்ச்சியில் லகரத்தைத் தொடர்ந்து வல்லினம் வரின் லகரம் எவ்வாறு திரியும்
அ) இயல்பாகப் புணரும் ஆ) லகரம் டகரமாகும்
இ) லகரம் னகரமாகும் ஈ) லகரம் றகரமாகும் [விடை: ஈ]

2. வேற்றுமைப் புணர்ச்சியில் ளகரத்தைத் தொடர்ந்து மெல்லினம் வரின் ளகரம் எவ்வாறு திரியும்
அ) ளகரம் லகரமாகும் ஆ) ளகரம் ணகரமாகும்
இ) ளகரம் டகரமாகும் ஈ) இவற்றில் எதுவுமில்லை [விடை: ஈ]

3. எழுதும்போது வரும் பிழைகளை ................ வகையாகக் கொள்ளலாம்.
அ) 3 ஆ) 4 இ) 5 ஈ) 6 [விடை: ஆ]

4. உயிரெழுத்துகள்
அ) 10 ஆ) 12 இ) 30 ஈ) 18 [விடை: ஆ]

5. உயிரெழுத்துகளின் வகை
அ) 2 ஆ) 4 இ) 12 ஈ) 18 [விடை: அ]

6. மெய்எழுத்துகள்
அ) 3 ஆ) 18 இ) 12 ஈ) 30 [விடை: ஆ]

7. மெய்எழுத்துகளின் வகை
அ) 3 ஆ) 12 இ) 18 ஈ) 30 [விடை: அ]

8. உயிர் மெய்யெழுதுக்கள்
அ) 18 ஆ) 126 இ) 216 ஈ) 247 [விடை: இ]

9. உயிர் மெய்க்குறில்
அ) 90 ஆ) 126 இ) 247 ஈ) 216 [விடை: அ]

10. உயிர் மெய் நெடில்
அ) 90 ஆ) 126 இ) 247 ஈ) 216 [விடை: ஆ]

11. தமிழ் எழுத்துகள் மொத்தம்
அ) 90 ஆ) 246 இ) 216 ஈ) 247 [விடை: ஈ]

12. ந, ண, ன, ற, ர, ல,ள,ழ - இவ்வெட்டு எழுத்துகளில் சொல்லின் தொடக்கமாக வரும் எழுத்து
அ) ர ஆ) ல இ) ந ஈ) ற [விடை: இ]

13. சொல்லின் இறுதியில் வராத எழுத்தைக் கண்டறிக.
அ) ர ஆ) ல இ) ந ஈ) ற [விடை: இ]

14. ................ சொல்லின் தொடக்கமாக மெய்யெழுத்துகள் வருவதில்லை.
அ) வடமொழியில் ஆ) தமிழில் இ) ஆங்கிலத்தில் ஈ) இந்தியில் [விடை: ஆ]

15. க்ரீடம், ப்ரியா - என்பவை ................ மொழிச் சொற்கள்.
அ) வட ஆ) அரபு இ) தமிழில் ஈ) தெலுங்கு [விடை: அ]

16. **தமிழ்ச் சொல் ................ மெய்யோடு முடியாது.**
அ) வல்லின ஆ) மெல்லின இ) இடையின ஈ) உயிர் **[விடை: அ]**

17. **ட், ற் என்னும் மெய்களுக்குப் பிறகு அவ்வெழுத்து வரிசைகளும் ................ என்னும் வரிசையே வரும்.**
அ) க, ச, ப ஆ) ன, ண, ந இ) ர, ற ஈ) ப. ம. ய **[விடை: அ]**

18. **சரியான கூற்றினைக் கண்டறிக.**
i) வல்லின மெய்கள் ஈறொற்றாய் வாரா
ii) ட், ற் என்னும் மெய்களை அடுத்து மெய்கள் வருவதில்லை
iii) க், ச், த்,ப, ஆகியவற்றின்பின் அவற்றின் அவ்வெழுத்து வரிசைகளே வரும்
அ) i, ii - சரி ஆ) ii, iii - சரி இ) i, iii - சரி ஈ) மூன்றும் சரி **[விடை: ஈ]**

19. **சொல்லின் முதலில் வராத எழுத்துகள்**
அ) ட, ற ஆ) த, ந இ) ப, ம ஈ) க, ச **[விடை: அ]**

20. **ஆய்த எழுத்து சொல்லின் ................ வரும்.**
அ) முதலில் ஆ) இடையில் இ) கடைசியில் ஈ) ஈற்றில் **[விடை: இ]**

21. **மெல்லின எழுத்துகளில் சொல்லின் தொடக்கமாக வராதவை**
அ) ங, ஞ ஆ) ங, ம இ) ண, ன ஈ) ந, ம **[விடை: ஈ]**

22. **................ என்னும் எழுத்துகளுக்குப் பின் வியங்கோள் வினைமுற்று/கள் விகுதி/வல்லினத்தில் தொடங்கும் சொற்கள் வரும்போது இயல்பாய் நிற்கும்.**
அ) ய், ர், ல், ழ், ள் ஆ) ற், ட் இ) ங. ஞ, ண, ர. ம ஈ) க், ச் ட், த், ப் **[விடை: அ]**

23. **................ ஒற்றுகள் மட்டுமே ஈரொற்றாய் வரும்.**
i) ய ii) ர iii) ழ
அ) மூன்றும் சரி ஆ) மூன்றும் தவறு இ) i, iii - சரி ஈ) i, ii - சரி **[விடை: அ]**

24. **தனிக்குறிலை அடுத்து ................ ஒற்றுகள் வாரா.**
அ) க, ச ஆ) ர, ழ இ) த, ப ஈ) க, ப **[விடை: ஆ]**

25. **லகரத்தைத் தொடர்ந்து மெல்லினம்வரின் லகரம் ................ திரிவதுண்டு.**
அ) னகரமாய்த் ஆ) ணகரமாய்த் இ) டகரமாய்த் ஈ) மகரமாய்த் **[விடை: அ]**

26. **ளகரத்தைத் தொடர்ந்து வல்லினம்வரின் ளகரம் ................ திரிவதுண்டு.**
அ) னகரமாய்த் ஆ) ணகரமாய்த் இ) டகரமாய்த் ஈ) றகரமாய்த் **[விடை: இ]**

27. **ளகரத்தைத் தொடர்ந்து மெல்லினம்வரின் ளகரம் ................ திரிவதுண்டு.**
அ) னகரமாய்த் ஆ) ணகரமாய்த் இ) டகரமாய்த் ஈ) றகரமாய்த் **[விடை: ஆ]**

28. **சரியானவற்றைக் கண்டறிக.**
i) இயக்குநர் ii) இயக்குனர் iii) உறுப்பினர் iv) வீட்டினர்
அ) i - சரி ஆ) ii, iii - சரி
இ) iv - சரி ஈ) ii - மட்டும் தவறு **[விடை: ஈ]**

## குறுவினா

1. **எழுதும்போது ஏற்படும் பிழைகளை எவ்வாறு வகைப்படுத்தலாம்?**
   - எழுத்துப்பிழை.
   - சொற்பொருட்பிழை.
   - சொற்றொடர்ப் பிழை.
   - பொதுவான பிழைகள் சில என வகைப்படுத்தலாம்.

2. **எழுத்துப் பிழைக்கு முதன்மையான காரணம் யாது-**
   - ஏல்லா இடங்களிலும் பேச்சுத்தமிழை எழுத முடியாது.
   - பேசுவதைப் போலவே எழுத எண்ணுவதே எழுத்துப்பிழைக்கு முதன்மையான காரணம் எனலாம்.

3. **எந்நான்கை உள்ளடக்கியது ஒரு மொழியின் இலக்கணம் என்று தமிழ்நடைக் கையேடு குறிப்பிடுகிறது?**

   ஒரு மொழியில் அடிப்படை அறிவு என்பது அந்த மொழியில் உள்ள எழுத்துகளையும் சொற்களையும் அவற்றின் பொருளையும் வாக்கிய அமைப்புகளையும் சேர்ந்திருப்பதே. மேலே குறிப்பிட்ட நான்கையும் உள்ளடக்கியது ஒரு மொழியின் இலக்கணம் என்கிறது தமிழ் நடைக் கையேடு.

4. **சொல்லில் ஆய்த எழுத்தின் நிலை குறித்தெழுதுக.**
   - ஆய்த எழுத்து சொல்லின் இடையில் மட்டுமே வரும்.
   - தனிச்சொல்லாயின் மூவெழுத்தாகவும், தனிக்குறிலை அடுத்தும் வரும்.

   **சான்று:** அஃது, எஃகு, கஃசு.

5. **தனிக்குறிலையடுத்து ரகரம் வரின் எவ்வாறு எழுத வேண்டும்?**

   தனிக்குறிலையடுத்து ரகரம் வரின் அதனைத் தமிழ் இயல்புக்கேற்பத் திருத்தி எழுத வேண்டும்.

   **சான்று:** நிர்வாகம் - நிருவாகம்; கர்மம் - கருமம்.

## கற்பவை கற்றபின்

பக்கம்: 17

1. **மயங்கொலி எழுத்துகள் (ண, ந, ன, ல, ழ, ள, ர, ற) அமைந்த சொற்களைத் திரட்டி, பொருள் வேறுபாடு அறிந்து வகுப்பறையில் கலந்துரையாடுக.**

*மாணவச் செல்வங்களே,*

இன்று உங்களுக்கு மயங்கொலி எழுத்துகள் அமைந்த சொற்களையும், அதன் பொருள் வேறுபாட்டினையும் கற்பிக்கப் போகிறேன்.

**ராமு** : ணகர னகர வேறுபாடுகளை விளக்குங்கள் ஐயா.

அண்ணம் - மேல்வாய்

அன்னம் - உணவு / சோறு

ட - பக்கத்தில் வரும் ண - இதை டண்ணகரம் என்று அழைப்பதுண்டு.

அன்னத்தில், ற - பக்கத்தில் வரும் ன - இதை றன்னகரம் என்று அழைப்பதுண்டு.

**சோமு** : ஐயா இதன் பயன்பாடுகள் பற்றிக் கூறுங்கள் ஐயா.

இதன் பயன்பாடுகள் : ட - ண வும், ற - பக்கத்தில் ன வும் வரும் எனப்புரிந்தால் எழுத்துப்பிழைகள் மிகக் குறையும்.

மன்றம் - அவை
மண்டபம் - மக்கள் கூடுமிடம்
குன்று - சிறிய மலை
குண்டு - உருண்டை (வடிவம்)

இவை போன்று வேறுபாடு கண்டு பிழைகளைக் களையலாம்.

**ராமு** : இன்னுமொரு விளக்கம் தேவை. ல-ழ வேறுபாடுகள் பற்றியும் விளக்கம் தேவை ஐயா.

**ல-ழ வேறுபாடு**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கலை | - | நுட்பம் / அறிவு | கழை | - | மூங்கில் |
| மலை | - | குன்று | மழை | - | வான்மழை |
| தலை | - | உடல் உறுப்பு | தழை | - | வளர் / இலை |
| விலை | - | மதிப்பு | விழை | - | விருப்பம் |

இவ்வாறான மயங்கொலிச் சொற்களை பேசுவது மற்றும் எழுதுவதன் மூலம் பிழை தவிர்க்கலாம்.

**ராமு** : மிக்க நன்றி ஐயா, தெளிவாகப் புரிந்து கொண்டேன் ஐயா.
ர-ள மயங்கொலிச் சொற்களுக்கு எ.கா. தாருங்கள் ஐயா.

**ர - ற வேறுபாடு**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மரம் | - | தாவரம் | மறம் | - | வீரம் |
| அரம் | - | கருவி | அறம் | - | தருமம் |

இவ்வாறான மயங்கொலிச் சொற்களைப் பேசுவது மற்றும் எழுதுவதன் மூலம் பிழை தவிர்க்கலாம்.

**சோமு** : ஐயா, கடைசியாக லகர ளகர வேறுபாட்டையும் கூறுங்கள் ஐயா.

**ல ள வேறுபாடு**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கலை | - | அறிவு/ நுட்பம் | | | |
| களை | - | பயிரின் நடுவே வளர்வது / ஆடை களைதல் | | | |
| கோல் | - | குச்சி | கோள் | - | செவ்வாய் (கோள்) |
| வலம் | - | வலப்புறம் | வளம் | - | செழிப்பு |

இவ்வாறான மயங்கொலிச் சொற்களைப் பேசுவது மற்றும் எழுதுவதன் மூலம் பிழை தவிர்க்கலாம் மாணவர்களே.

மாணவர்களே மற்றொரு வகுப்பில் சந்திக்கலாம்.

## மொழியை ஆள்வோம்

பக்கம்: 19

### சான்றோர் சித்திரம்


*ஆறுமுக நாவலர்*
*1822 - 1879*

வழக்கு ஒன்றில் சாட்சி அளிக்க நீதிமன்றத்திற்குத் தமது மாணவர்களுடன் வந்திருந்தார் தமிழறிஞர் ஒருவர். அக்கால ஆங்கிலேய நீதிபதிகளுக்கு மொழிபெயர்த்துச் சொல்ல அதிகாரிகள் இருப்பார்கள். தமிழறிஞர், சாட்சியத்தை ஆங்கிலத்திலேயே சொல்ல ஆரம்பிக்க, குறுகிய மனம் கொண்ட நீதிபதி அதை ஏற்றுக்கொள்ள மனம் ஒப்பாமல் தமிழில் கூறச் சொல்லி உத்தரவிட்டார். அவர்

உடனே 'அஞ்ஞான்று எல்லி எழ நானாழிப் போதின்வாய் ஆழிவரம் பனைத்தே காலேற்றுக் காலோட்டப் புக்குழி' என்று துவங்கினார். மொழிபெயர்ப்பாளர் திணறிப் போனார். கோபமுற்ற நீதிபதி ஆங்கிலத்தில் பேசக் கூறி உத்தரவிட அவர் மறுத்துத் தமிழிலேயே வறினார். அவரது மாணவர் மற்றவர்களுக்குப் புரியும்படி விளக்கினார். 'சூரியன் தோன்றுவதற்கு நான்கு நாழிகை முன்னர் கடற்கரை ஓரம் காற்று வாங்கச் சிறுநடைக்குப் புறப்பட்டபோது' என்பது அவர் கூறியதற்குப் பொருள். இத்தகைய மொழித்திறன் கைவரப்பெற்றவர்தான் ஆறுமுக நாவலர்.

'வசனநடை கைவந்த வல்லாளர்' எனப் புகழப்படும் ஆறுமுக நாவலர் யாழ்ப்பாணம் நல்லூரில் பிறந்தவர். தமிழ், வடமொழி, ஆங்கிலம் எனும் மும்மொழிப் புலமை பெற்றவர். தமிழ்நூல் பதிப்பு, உரைநடை ஆக்கம், பாடசாலை நிறுவுதல், அச்சுக்கூடம் நிறுவுதல், கண்டன நூல்கள் படைத்தல், சைவ சமயச் சொற்பொழிவு எனப் பன்முக ஆளுமை பெற்றவர்.

திருக்குறள் பரிமேலழகர் உரை, சூடாமணி நிகண்டு, நன்னூல்-சங்கர நமச்சிவாயர் விருத்தியுரை என்று பல நூல்களைப் பதிப்பித்தார். இலக்கண நூல்கள், பூமி சாஸ்திரம் முதலான பாட நூல்கள் அவரால் ஆக்கப்பட்டன, புராண நூல்களை வசனமாகி எழுதி அதனை அனைவரும் படிக்கும் எளிய வடிவமாக மாற்றினார். தமது இல்லத்தில் அச்சுக்கூடம் நிறுவிப் பல நூல்களை அச்சிட்டார். திருவாவடுதுறை ஆதினம் இவருக்கு 'நாவலர்' பட்டம் வழங்கியது. பெர்சிவல் பாதிரியார் விவிலியத்தைத் தமிழில் மொழிபெயர்க்கவும் இவர் உதவினார்.

**வினாக்கள்:**

1. **'எல்லி' என்பதன் பொருள் என்ன?**
2. **ஒரு நாழிகை என்பது எவ்வளவு நேரம்?**
3. **ஆழி, கால் பொருள் தருக.**
4. **ஆறுமுக நாவலர் எவ்வாறு புகழப்பட்டார்? அவர் அறிந்திருந்த மொழிகள் யாவை?**
5. **பெற்றவர் - இலக்கணக்குறிப்புத் தருக.**
6. **விவிலியத்தைத் தமிழில் மொழிபெயர்த்தவர் யார்?**
7. **ஆறுமுக நாவலரின் இயற்பெயர் என்ன? 'நாவலர்' என்ற பட்டத்தை யார் வழங்கினார்?**
8. **'வந்திருந்தார்' இரு பொருள்படும்படி வாக்கியம் அமைக்க.**

**விடைகள்:**

1. சூரியன்.
2. 24 நிமிடம்.
3. ஆழி - மோதிரம், கடல்.
   கால் - உடல்உறுப்பு, காற்று.
4. 'வசனநடை கைவந்த வள்ளலார்' எனப் புகழப்பட்டார். தமிழ், வடமொழி, ஆங்கிலம் என்னும் மும்மொழிப் புலமை பெற்றவர்.
5. பெற்றவர் - வினையாலணையும் பெயர்.
6. பெர்சிவல் பாதிரியார்.
7. இயற்பெயர் - ஆறுமுகம்.
   நாவலர் பட்டம் - திருவாவடுதுறை ஆதீனம் வழங்கியதாகும்.
8. வந்திருந்தார் : உடல் நலம் சரியில்லாத என் தந்தையைக் காண என் மாமா நீண்ட நாள் கழித்து வந்தார்.
   வந்து இருந்தார் : பொதுக்கூட்டம் காண பல மைல் தூரம் நடந்த குமரன் கால் வலியால் வந்து இருந்தார்.

## தமிழாக்கம் தருக

1. Learning is a treasure that will follow its owner everywhere. (Chinese Proverb).
   கற்றவருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு.
2. A new language is a new life. (Persian Proverb).
   புதிய மொழி புதிய வாழ்க்கை.
3. If you want people to understand you, speak their language. (African Proverb).
   பிறர் உன்னைப் புரிந்து கொள்ள வேண்டுமாயின் அவர் மொழியில் பேசு.
4. Knowledge of languages is the doorway to wisdom. (Roger Bacon).
   மொழிகளின் அறிவு ஞானத்தின் வழித்தடம்.
5. The limits of my language are the limits of my world. (Willgenstin).
   என் மொழியின் எல்லை என் உலகத்தின் எல்லை.

## இலக்கிய நயம் பாராட்டுக

முச்சங்கங் கூட்டி
முதுபுலவர் தமைக் கூட்டி
அச்சங்கத் துள்ளே
அளப்பரிய பொருள்கூட்டி
சொற்சங்க மாகச்
சுவைமிகுந்த கவிகூட்டி
அற்புதங்க ளெல்லாம்
அமைத்த பெருமாட்டி! – ***கண்ணதாசன்***

**முன்னுரை :**

இப்பாடலைப் பாடியவர் கவியரசு கண்ணதாசன் ஆவார். புகழ்பெற்ற தமிழ்த்திரைப்படப் பாடலாசிரியரும் கவிஞரும் ஆவார். தமிழக அரசின் அரசவைக் கவிஞராக இருந்தவர். நான்காயிரத்திற்கும் மேற்பட்ட கவிதைகள் எழுதியுள்ளார். சாகித்ய அகாதமி விருது பெற்றவர்.

**திரண்ட கருத்து :**

தமிழன்னையானவள், மூன்று சங்கங்கள் அமைய காரணமானவள். முச்சங்கங்களிலும் நல்ல அனுபவமும் நல்ல அறிவும் கொண்ட புவர்களை ஒன்றாகக் கூட்டியவள். அச்சங்கத்திற்குள் அளவிடமுடியாத பொருள்களைக் கூட்டி நீ உன்னுடைய சொற்களை அதிகரித்து அதே நேரத்தில் சுவை மிக்க கவிதைகளை எல்லாம் ஒரே இடத்தில் கூடிவருமாறு புதுமைகள் எல்லாம் அமைந்த பெருமகளே ! தமிழன்னையே !

**தொடை நயம் :**

**மோனை :**

**காட்டுக்கு யானை**
**பாட்டுக்கு மோனை**

முதலெழுத்து ஒன்றி வருவது மோனையாகும்.

**சான்று:**

| | | | |
|---|---|---|---|
| **மு**ச்சங்கங் | **அ**ச்சங்கத் | **சொ**ற்சங்க | **அ**ற்புதங்க |
| **மு**துபுலவர் | **அ**ளப்பரிய | **சு**வைமிகுந்த | **அ**மைத்த |

**எதுகை :**

**மதுரைக்கு வைகை**
**செய்யுளுக்கு எதுகை**

முதலெழுத்து அளவொத்திருக்க இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகையாகும்.

**சான்று:**

முச்சங்க　　சொற்சங்க
அச்சங்க　　அற்புதங்க

**இயைபு :**

கடைசி எழுத்தோ ஓசையோ ஒன்றி வருவது இயைபு ஆகும்.

**சான்று:**

பெருமாட்டி
கவிகூட்டி
பொருள்கூட்டி
தமைக்கூட்டி

**அணி நயம் :**

**அணியற்ற பாக்கள்**
**பிணியுள்ள வணிதை**

தமிழ் மொழியானது சங்கம் வைத்து வளர்க்கப்பட்ட மொழி என்று இயல்பான வார்த்தைகளால் இப்பாடல் அமைந்துள்ளதால் இயல்பு நவிற்சியணி இடம் பெற்றுள்ளது.

**சந்த நயம் :**

**சந்தம் தமிழுக்குச் சொந்தம்**

ஏற்ற கருவியுடன் பாடினால் கேட்போருக்கும், பாடுவோருக்கும் இனிமையத் தரும் விதத்தில் அமைக்கப்பட்டுள்ளது இப்பாடல்.

**சுவை நயம் :**

**நா உணரும் சுவை ஆறு**
**மனம் உணரும் சுவை எட்டு**

என்ற வகையில் இப்பாடலில் சொற்சங்க மாகச் சுவைமிகுந்த கவிகூட்டி பெருமிதச் சுவை மிகுந்துள்ளது.

**முடிவுரை:**

கற்றாருக்கும், கல்லாருக்கும் ஏற்ற வகையில் எதுகை, மோனை, இயைபு இயைந்தோட, கற்பனை காட்சியளிக்க, சந்தம் தாளமிட, சுவை உண்டாகி, நா ஏக்கமுற, அணியோடு அழகுபெறும் வகையில் இக்கவிதை அமைந்துள்ளது.

## கீழ்க்காணும் பத்தியைப் படித்து ஐந்து வினாக்களை உருவாக்குக.

மொழி என்பது மக்கள் படைத்துக் காக்கும் அரியதொரு கலை. மொழியே மக்களின் அறிவை வளர்த்து உயர்த்தும் அரிய கருவியாகவும் உள்ளது. பெற்ற தாயின் முதல் வேட்கை தன் குழந்தையுடன் பேசுதல். அவள் முதலில் அடையும் பெரிய மகிழ்ச்சி, குழந்தையின் பேச்சைக் கேட்பதே ஆகும். குழந்தையின் மனவளர்ச்சியோடு தொடர்புடையது மொழி வளர்ச்சியே ஆகும். மனம் என்பது பெரும்பாலும் மொழியால் வளர்ந்து அமைந்தது. மனத்தின் வளர்ச்சிக்கு ஏற்பவே பேசுவோரின் மொழியும் வளர்ச்சி பெற்று நிற்கும் மக்கள் அனைவரும் மொழிக்கு ஆசிரியராகவும்

உள்ளனர் ; மாணவராகவும் உள்ளனர். மொழியை வளர்ப்பவரும் மக்களே ; மொழியால் வளர்பவரும் மக்களே.

*- மொழி வரலாறு (மு. வரதராசனார்)*

**வினாக்கள் :**

1. மக்கள் படைத்துக் காத்துவரும் அரிய கலை எது? அது ஆற்றும் செயல் யாது?
2. தாயின் முதல் விருப்பம் என்ன?
3. மொழி வளர்ச்சி எதனோடு தொடர்புடையது?
4. மொழியை வளர்ப்பவரும், மொழியால் வளர்பவரும் யார்?
5. மொழி வளர்ச்சி எதனைப் பொறுத்தது?

## உவமைத் தொடர்களைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக.

தாமரை இலை நீர் போல, கிணற்றுத் தவளை போல, எலியும் பூனையும் போல, அச்சாணி இல்லாத தேர் போல, உள்ளங்கை நெல்லிக்கனி போல.

1. **தாமரை இலை நீர் போல - பட்டும் படாமலும், ஈடுபாடும் இல்லாமலும் இருத்தல்.**
   இவ்வுலக ஆசைகளின்மீது தாமரை இலை நீர் போல பற்று இல்லாமல் இருத்தல் வேண்டும்.
2. **கிணற்றுத் தவளை போல - வெளி உலகம் தெரியாத நிலை.**
   இன்னும் சில கிராமங்களில் மக்கள் கிணற்றுத் தவளை போல வாழ்கின்றனர்.
3. **எலியும் பூனையும் போல - எதிரிகளாக.**
   ரகுவும் ரவியும் எலியும் பூனையும் போலச் சண்டையிட்டுக் கொண்டனர்.
4. **அச்சாணி இல்லாத தேர் போல - சரியான வழிகாட்டி.**
   நாட்டை வழி நடத்த சரியான தலைவன் இல்லாததால் நாட்டு மக்கள் அச்சாணி இல்லாத தேர் போல சரிவர இயங்காமல் தவிக்கின்றனர்.
5. **உள்ளங்கை நெல்லிக்கனி போல - வெளிப்படையாக, தெளிவாக.**
   தமிழாசிரியர் கற்பித்த புணர்ச்சி இலக்கணம் எங்களுக்கு உள்ளங்கை நெல்லிக்கனி போலத் தெளிவாய் விளங்கியது.

## பயிற்சி

| | | |
|---|---|---|
| 1. பசுமரத்தாணி போல | - | எளிதாக |
| 2. மடைதிறந்த வெள்ளம் போல | - | வேகமாக |
| 3. அடியற்ற மரம் போல | - | வலுவிழந்து |
| 4. கல்மேல் எழுத்து போல | - | அழியாமல் |
| 5. நகமும் சதையும் போல | - | இணை பிரியாமை |
| 6. அடுத்தது காட்டும் பளிங்கு போல | - | வெளிப்படுத்த |
| 7. இலவு காத்த கிளி போல | - | ஏமாற்றம் |
| 8. அலை ஓய்ந்த கடல் போல | - | அமைதி |
| 9. இஞ்சி தின்ற குரங்கு போல | - | விழித்தல் |
| 10. கயிறற்ற பட்டம் போல | - | தவித்தல், வேதனை |





www.GRLVidya.in

## ஒரு பக்க அளவில் கட்டுரை எழுதுக.

**தாய்மொழிவழிக் கல்வியின் சிறப்புகள்.**

**எண்ணத்தை வெளியிடுவதற்கும், சிந்தனையாற்றல் பெருகுவதற்கும் தாய் மொழியே துணை நிற்கும் - இதனை வலியுறுத்தி பின்வரும் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.**

**தாய்மொழிக் கல்வியின் தேவை - தாய்மொழிச் சிந்தனை - அறிஞர்களின் பார்வை - கற்கும் திறன் - பயன் - இன்றைய நிலை.**

### முன்னுரை :

**''தாய்மொழி கண் போன்றது**
**பிறமொழி கண்ணாடி போன்றது''**

நமது எண்ணங்களைப் பிறருக்கு வெளிப்படுத்த உதவுவது மொழியே. மொழி ஒரு கருவி. மனிதன் மொழியால்தான் வாழ்கின்றான். மொழியால்தான் கருத்துப் பரிமாற்றமும் செய்கின்றான். தனது எண்ணத்தை வெளியிடுவதற்கும் சிந்தனையாற்றலைப் பெருக்கவும் துணையாக இருக்கும் தாய்மொழி வழிக் கல்வியின் சிறப்புகள் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

### தாய்மொழிக் கல்வியின் தேவை :

மனிதனின் அடையாளம் அவனது தாய்மொழிதான். கல்வி என்பது தாய்மொழி வழியாக மட்டுமே கற்பிக்க பட வேண்டும். மனிதனின் சிந்தனையும் கற்பனையும் தாய்மொழியில்தான் உருவாகின்றன. எனவே, மனிதனின் சிந்தனை வளர்ச்சிக்குத் தாய்மொழிக் கல்வியே சிறந்தது. சிந்திக்கின்ற மொழியிலே பயிற்றுவிக்கப்படுகின்ற கல்வி சிந்தனையைக் கூட்டுகின்றது. நுணுக்கங்களையும் அறிவியல் படைப்புகளையும் உருவாக்க மனிதர்களைத் தயாாப்படுத்துகின்றது.

### தாய்மொழிச் சிந்தனை :

தாய்மொழிதான் சிந்திக்கும் திறனின் திறவுகோலாக இருக்கின்றது. எத்தனை மொழிகள் கற்றாலும் எந்த மொழியைக் கற்றாலும் ஒருவனின் சிந்தனை உருவெடுப்பது தாய்மொழியில்தான். தாய்மொழியால் சிந்தனை பெருகும். மனிதர்களின் மனவெழுச்சி வாழ்விற்கு அடிப்படை. அத்தகைய மனவளர்ச்சியைத் தாய்மொழியால் மட்டுமே கொடுக்க இயலும். தாய்மொழியில் சிந்திப்பதால் உயர்ந்த கருத்துக்களைச் சிறந்த சொற்களைக் கொண்டு உணர்த்த முடியும்.

### அறிஞர்கள் பார்வை :

உலகில் வாழ்ந்த பல அறிஞர்கள் தாய்மொழிக் கல்வியின் அவசியத்தைக் கூறியிருக்கின்றார்கள். காந்தியடிகள் கூறும் போது ஜெகதீஷ் சந்திர போஸ், பி.சி. இராய் முதலியோரின் சாதனைகளைக் கண்டு நாம் மகிழ்ச்சியடைகிறோம். ஆனால், தாய்மொழி மூலம் நமக்குக் கல்வி அளிக்கப்பட்டிருந்தால் நம்மிடையே பல போஸ்களும், இராய்களும் தோன்றியிருப்பார்கள் என்கிறார். சாகித் ஹுசைன் (1938-ஆம் ஆண்டு) குழு தாய்மொழியில் கற்றுக்கொடுத்தலை வலியுறுத்துகிறது, டி.எஸ். கோத்தாரி குழுவும் (1964) தேசியக்கல்விக் கொள்கையில் தாய்மொழி கல்வியை வலியுறுத்தியது.

### கற்கும் திறன் :

தாய்மொழியைப் போற்றி வீழ்ந்த நாடும் இல்லை. தாய்மொழியைப் புறக்கணித்து வாழ்ந்த நாடும் இல்லை. தாய்மொழி மூலமாகவே ஒருவர் தான் கூற விரும்பும் கருத்தைத் தெளிவாகவும் முழுமையாகவும் ஆழமாகவும் தெரிவிக்க முடியும். கற்கும் திறன் அதிகரிப்பது தாய்மொழி வழியாகவே, தாய்மொழி வழியாகக் கற்கும் போது சிந்தனைத்திறன் அதிகமாகும்.

**தாய்மொழிக் கல்வியின் பயன் :**

"கருவில் உள்ள குழந்தை ஏழு மாதத்திலேயே மூளை முதிர்ச்சிப் பெற்று ஒலிகளைக் கேட்கிறது" என்கின்றனர். மருத்துவ அறிஞர்கள், குழந்தை வளரும் சூழல் மொழித்தாக்கத்திற்கு அடிப்படையாக அமைகிறது. அக்குழந்தைகள் தாய்மொழி வழியாகக் கற்கும் சூழல் ஏற்பட்டால் மிகச் சிறந்த அறிஞர்களாக, மேதைகளாக அக்குழந்தைகள் வளரும். குழந்தைகள் தாய்மொழி வழியாகக் கல்விக் கற்றால் தரமான கல்வியைப் பெறுவார்கள்.

**இன்றைய நிலை :**

இன்று தாய்மொழி வழியில் கல்விச் கற்பதைக் கௌரவக் குறைச்சலாகவும், கேவலமாகவும் நினைக்கின்றனர். தாய்மொழியில் கல்விக் கற்றவர்களைத் தரம் குறைந்தவர்களாகப் பார்ப்பது சமூகத்தில் நிலவி வரும் அவலங்களுள் ஒன்றாகும். தாய்மொழியில் கல்விக் கற்போருக்கு அரசுப் பணிகளில் முன்னுரிமை வழங்குதல் வேண்டும்.

**முடிவுரை :**

மொழி என்பது ஒரு தகவல் தொடர்புச் சாதனம் மட்டுமன்று. ஒரு பண்பாட்டின், ஒரு இனத்தின் அடையாளம் என்பதை யாவரும் உணர்ந்தாலே தாய்மொழியை அழிவிலிருந்து காக்கலாம்.

## மொழியோடு விளையாடு

பக்கம்: 21

**எண்ணங்களை எழுத்தாக்குக.**



கண்ணால் கண்டவற்றைக் கையால்
கலைவடிவமாக்கி
காண்பவர் கண்களுக்குக்
காட்சி தரும் விருந்தாக்கி
காலங்கள் கடந்தாலும் கண்களை
விட்டு அகலா ஓவியமாக்கி
கல்லைச் சிலையாக்கும் சிற்பியே
காலங்காலமாய் நிற்பாய் என்றும்!

**அந்தாதித் தொடரால் கவித்துவமாக்குக.**

குழந்தையைக் கொஞ்சும் தாயின் குரல்
தாயின் குரலில் உயிரின் ஒலி
**உயிரின் ஒலியே தாயின் அரவணைப்பு**
**அரவணைக்கும் அவளையே அகத்தில் எண்ணுவோமே!**

**குறிப்புகளில் மறைந்திருக்கும் தமிழறிஞர்களைக் கண்டுபிடிப்போம்.**

**எ.கா. கவிஞர்; ஈற்றிரு சொல்லால் அணிகலன் செய்யலாம் – கவிமணி.**

1. தமிழறிஞர் : முதலிரு எழுத்துகளால் மறைக்கலாம். **விடை :** மறைமலை அடிகள்
2. தாய்மொழி : ஈற்றிரு எழுத்துக்கள் வெளிச்சம் தரும். **விடை :** தமிழ் ஒளி
3. சிறுகதை ஆசிரியர் : முதல் பாதி நவீனம் **விடை :** புதுமைப்பித்தன்
4. முன்னெழுத்து அரசன் : பின்னெழுத்து தமிழ் மாதம் **விடை :** கோதை

(தமிழ் ஒளி, அம்பை, கோதை, அசோகமித்திரன், புதுமைப்பித்தன், சூடாமணி, ஜெயகாந்தன், மறைமலை அடிகள்)

## நிற்க அதற்குத் தக

**கீழ்க்காணும் செயல்பாடுகளைச் சரி/தவறு எனப் பிரித்து, சரியெனில் காரணமும் தவறு எனில் மாற்றுவதற்குரிய செயலையும் குறிப்பிடுக.**

| செயல்பாடு | சரி - காரணம் | தவறு - மாற்றம் |
|---|---|---|
| **எ.கா. பொருட்களை எடுத்த இடத்தில் வைத்தல்** | **சரி, பொருட்களைத் தேடாது எடுக்க முடியும். நேரம் வீணாதல் தவிர்க்கப்படும்.** | |
| பொதுவிடத்தில் எச்சில் துப்புதல் | | தவறு, துப்புதற்கு உரிய இடத்தில் துப்பலாம். நோய்பரவுவதைத் தடுக்கலாம். |
| வகுப்பில் காகிதங்களைக் கிழித்துப் போடுதல் | | தவறு, குப்பைக்கூடையில் போடுதல். வகுப்பறை சுத்தமாக வைப்பது கடமை. |
| இருக்கை, மேசைகளில் கிறுக்குதல் | | தவறு, இருக்கை, மேசை தோற்றம் வீணாகிவிடும் பள்ளியின் சொத்தினைப் பாதுகாப்பது நமது கடமை. |

## படிப்போம் - பயன்படுத்துவோம் (நூலகம்)

Subscription - உறுப்பினர் கட்டணம்
Fiction - புனைவு
Biography - வாழ்க்கை வரலாறு
Archive - ஆவணம்
Manuscript - கையெழுத்துப்பிரதி
Bibliography - நூல் நிரல்

✸✸★★★✸✸

# இயல் 1 மாதிரி வினாத்தாள் - 1

வகுப்பு : 12
நேரம் : 2.30 மணி  மதிப்பெண் : 90

**I. பலவுள் தெரிக.** 6 × 1 = 6

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.**

1. **இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல்**
அ) யாப்பெருங்கலக் காரிகை  ஆ) தண்டியலங்காரம்
இ) தொல்காப்பியம்  ஈ) நன்னூல்

2. **"மீண்டுமந்தப் பழமை நலம் புதுக்கு தற்கு" கவிஞர் குறிப்பிடும் பழமை நலம்**
க) பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தது  உ) பொதிகையில் தோன்றியது
ங) வள்ளல்களைத் தந்தது
அ) க - மட்டும் சரி  ஆ) க உ - இரண்டும் சரி
இ) ங - மட்டும் சரி  ஈ) க ங - இரண்டும் சரி

3. **"மின்னேர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது, தன்னேர் இலாத தமிழ்!" - இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடைநயம்**
அ) அடிமோனை, அடி எதுகை  ஆ) சீர்மோனை, சீர் எதுகை
இ) அடி எதுகை, சீர்மோனை  ஈ) சீர்எதுகை, அடிமோனை

4. **கருத்து 1: இயல்பு வழக்கில், தொடரமைப்பு என்பது எழுவாய், பயனிலை என்று வருவதே மரபு.**
**கருத்து 2: தொடரமைப்பு, சங்கப்பாடல்கள் பலவற்றில் பிறழ்ந்து வருகிறது.**
அ) கருத்து 1 சரி  ஆ) கருத்து 2 சரி
இ) இரண்டு கருத்தும் சரி  ஈ) கருத்து 1 சரி, கருத்து 2 தவறு

5. **பொருத்துக:**
அ) தமிழ் அழகியல் - 1. பரலி சு. நெல்லையப்பர்
ஆ) நிலவுப்பூ - 2. தி.சு. நடராசன்
இ) கிடை - 3. சிற்பி. பாலசுப்பிரமணியம்
ஈ) உய்யும் வழி - 4. கி. ராஜநாராயணன்
அ) 4, 3, 2, 1  ஆ) 1, 4, 2, 3  இ) 2, 4, 1, 3  ஈ) 2, 3, 4, 1

6. **கவிஞர் சிற்பி எழுதிய எந்தப் படைப்பிலக்கியத்திற்கு சாகித்திய அகாதமி விருது கிடைத்தது?**
அ) ஒரு கிராமத்தின் கதை  ஆ) ஒரு கிராமமே அழுதது
இ) ஒரு கிராமத்தின் நதி  ஈ) ஒரு புளியமரத்தின் கதை

**II. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** 8 × 1 = 8

7. **ஈறுபோதல் முன்நின்ற மெய்திரிதல் என்ற விதிப்படி அமைந்த சொல்**
அ) தனியாழி  ஆ) வெங்கதிர்  இ) விளங்கு  ஈ) ஆங்கவற்றுள்

8. **க்ரீடம், ப்ரியா - என்பவை ................ மொழிச் சொற்கள்.**
அ) வட  ஆ) அரபு  இ) தமிழில்  ஈ) தெலுங்கு

9. **பொருத்தாததைக் கண்டறிக.**
அ) இளந்தமிழே - சிற்பி
ஆ) தமிழ்மொழியின் நடை அழகியல் - தி.சு.நடராசன்
இ) தன்னேர் இல்லாத தமிழ் - தண்டி
ஈ) தம்பி நெல்லையப்பர்க்கு - நெல்லையப்பர்

10. **'செம்பரிதி' - என்பதன் இலக்கணக் குறிப்பு தருக.**
அ) பண்புத்தொகை  ஆ) எண்ணும்மை  இ) பெயரெச்சம்  ஈ) உம்மைத் தொகை

11. **Fiction என்பதன் தமிழ்ச் சொல்லை தேர்ந்தெடுக்கவும்.**
அ) புனைவு  ஆ) சட்டம்  இ) ஆவணம்  ஈ) கோப்பு

**12.** **காட்டு வாத்து என்ற நூலின் ஆசிரியர்**
அ) நா. முத்துசாமி ஆ) அகிலன் இ) நா. பிச்சமூர்த்தி ஈ) தி.சு. நடராசன்

**13.** **எழுதும்போது வரும் பிழைகளை எத்தனை வகையாகக் கொள்ளலாம்?**
அ) 3 ஆ) 4 இ) 5 ஈ) 6

**14.** **பிழையான தொடரைக் கண்டறிக.**
அ) காளைகளைப் பூட்டி வயலை உழுதனர். ஆ) மலை மீது ஏறிக் கல்வெட்டுகளைக் கண்டறிந்தனர்.
இ) காளையில் பூத்த மல்லிகை மனம் வீசியது. ஈ) நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கின.

**III. குறுவினா** **3 × 2 = 6**

**அ) எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.**

15. "படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்
கடாஅ யானைக் கலிமான் பேக" - இச்சங்கக் கவிதையின் அடிகளில் ஓசை நயமிக்க சொற்களையும் அவற்றிற்கான இலக்கணக் குறிப்புகளையும் எடுத்து எழுதுக.
16. கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட தமிழின் துணை வேண்டும் என்கிறார்?
17. விடியல், வனப்பு - இருசொற்களையும் ஒருங்கிணைத்துத் தொடர் அமைக்க.
18. கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் எழுதிய கவிதை நூல்கள் சிலவற்றை எழுதுக.

**ஆ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2 × 2 = 4**

19. நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.
20. பாடலின் தளத்தை ஏர் நடத்தி பண்படுத்திப் போகின்றனவை எவை?
21. 'கலை முழுமை' பற்றித் தொல்காப்பியம் குறிப்பிடுவது யாது?

**IV. எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** **7 × 2 = 14**

**22.** **ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.**
அ) வியந்து ஆ) இருந்தாய்

**23.** **ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.**
அ) செம்பரிதி ஆ) வானமெல்லாம்

**24.** **மரபுப்பிழையை நீக்கி எழுதுக.**
அ) யானை கத்தும் ஆ) கிளி பாடும்

**25.** **வேற்றுமைப் புணர்ச்சியில் ளகரத்தைத் தொடர்ந்து மெல்லினம் வரின் ளகரம் எவ்வாறு திரியும்?**
அ) ளகரம் லகரமாகும் ஆ) ளகரம் ணகரமாகும்
இ) ளகரம் டகரமாகும் ஈ) இவற்றில் எதுவுமில்லை

**26.** **சரியான கூற்றினைக் கண்டறிக.**
i) வல்லின மெய்கள் ஈறொற்றாய் வாரா
ii) ட், ற் என்னும் மெய்களை அடுத்து மெய்கள் வருவதில்லை
iii) க், ச், த்,ப, ஆகியவற்றின்பின் அவற்றின் அவ்வெழுத்து வரிசைகளே வரும்
அ) i, ii - சரி ஆ) ii, iii - சரி இ) i, iii - சரி ஈ) மூன்றும் சரி

**27.** **உவமைத் தொடர்களைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக.**
தாமரை இலை நீர் போல, கிணற்றுத் தவளை போல

**28.** **தேவையான இடங்களில் வல்லின மெய்களை இட்டு எழுதுக.**
வசனநடை கைவந்த வள்ளலாளர் என புகழப்படும் ஆறுமுக நாவலர் யாழ்பாணம் நல்லூரில் பிறந்தார்

**29.** **மயங்கொலிச் சொற்களின் பொருளறிந்து சொற்றொடர் அமைக்கவும்.**
அ) அழை ஆ) அளை

**30.** **கலைச் சொல்லாக்கம் தருக:** Internet

**V. சிறுவினா**

**அ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2 × 4 = 8**

31. செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான் செந்நிறத்துப் பூக்காடாம் வானமெல்லாம்'– தொடர் வெளிப்படுத்தும் காட்சி நயத்தை விளக்குக.

32. 'ஏங்கொலி நீர் ஞாலத்து இருளகற்றும்' - இடம் சுட்டிப் பொருள் விளக்குக.
33. சங்கப்பாடல்கள் பலவற்றுள் அமைந்துள்ள மறுதலைத் தொடரியல் போக்குக்குச் சான்று தந்து விளக்குக.

**ஆ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2 × 4 = 8**

34. சங்கப்பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் - விளக்குக.
35. பின்வரும் இரு பாக்களின் கருத்துகளிலுள்ள வேற்றுமையை எடுத்துக்காட்டுக.

| | |
|---|---|
| பழையன கழிதலும் புதியன புகுதலும்<br>வழுவல கால வகையி னானே<br>- நன்னூல் | மீண்டு மந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு<br>மெய்சிலிர்க்கத் தமிழ்க்குயிலே ! கூவி வா, வா!<br>- சிற்பி பாலசுப்பிரமணியம் |

36. பொருள் வேற்றுமை அணியைச் சான்று தந்து விளக்குக.

**VI. எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** **3 x 4 = 12**

37. வேற்றுமை அணி (அல்லது)

ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத்(து) - இப்பாடலில் பயின்று வரும் அணியை விளக்கு.

**38. கீழ்க்காணும் பத்தியைப் படித்து ஐந்து வினாக்களை உருவாக்குக.**

மொழி என்பது மக்கள் படைத்துக் காக்கும் அரியதொரு கலை. மொழியே மக்களின் அறிவை வளர்த்து உயர்த்தும் அரிய கருவியாகவும் உள்ளது. பெற்ற தாயின் முதல் வேட்கை தன் குழந்தையுடன் பேசுதல். அவள் முதலில் அடையும் பெரிய மகிழ்ச்சி, குழந்தையின் பேச்சைக் கேட்பதே ஆகும். குழந்தையின் மனவளர்ச்சியோடு தொடர்புடையது மொழி வளர்ச்சியே ஆகும். மனம் என்பது பெரும்பாலும் மொழியால் வளர்ந்து அமைந்தது. மனத்தின் வளர்ச்சிக்கு ஏற்பவே பேசுவோரின் மொழியும் வளர்ச்சி பெற்று நிற்கும் மக்கள் அனைவரும் மொழிக்கு ஆசிரியராகவும் உள்ளனர் ; மாணவராகவும் உள்ளனர். மொழியை வளர்ப்பவரும் மக்களே ; மொழியால் வளர்பவரும் மக்களே. *- மொழி வரலாறு (மு. வரதராசனார்)*

**39. கீழ்க்காணும் பாடலை படித்து ஏற்புடைய நயங்களை சுட்டிக்காட்டுக.**

முச்சங்கங் கூட்டி
　　முதுபுலவர் தமைக் கூட்டி
அச்சங்கத் துள்ளே
　　அளப்பரிய பொருள்கூட்டி
சொற்சங்க மாகச்
　　சுவைமிகுந்த கவிகூட்டி
அற்புதங்க ளெல்லாம்
　　அமைத்த பெருமாட்டி! - கண்ணதாசன்

**40. தமிழாக்கம் தருக.**

1. Learning is a treasure that will follow its owner everywhere. (Chinese Proverb).
2. A new language is a new life. (Persian Proverb).
3. If you want people to understand you, speak their language. (African Proverb).
4. Knowledge of languages is the doorway to wisdom. (Roger Bacon).

**VII. பின்வரும் வினாக்களுக்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக :** **3 x 6 = 18**

41. தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.
42. கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக.
43. பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்து கொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க

**VIII. அடிமாறாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** **4 + 2 = 6**

44. அ) 'ஓங்கலிடை' - எனத் தொடங்கும் தன்னேரில்லாத தமிழ் எனும் பாடல்.
ஆ) 'அது' என முடியும் குறள்.

✸✸★★★✸✸